1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 50-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு மார்கழிமாதம் 20-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

கிறிஸ்மஸ் விழா விசேஷ இதழ்

பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின்
புதிய ஆசனக் கோவில்
பிரவேச திரு வைபவம்

பொன்னுலகும், பூவுலகும் பொன்னடிபணிந்து, போற்றிப்புகழ்ந்து, அஞ்சலிசெய்து, அன்புபாராட்டும் பூசித கொஞ்சேஞ்சி அன்னையார் தமக்குத் தோத்திரமாகக் கட்டியெழுப்பப்பெற்றிருக்கும் பொன்னுலய மாகிய புதிய ஆசனக்கோவிலிலே நிகழும் மார்கழிமாதம் 24-ந் தேதி திங்களன்று மங்கலகரமாகப் பிரவேசமாகித் தமது பொற்சிம்மாசனத்தெழுந்தருள விருக்கிறார் என்னும் ஆனந்த சுபசெய்தியை அவரின் பக்தகோடிகட் கெல்லாம் அகமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம். அன்று பிற்பகல் மேற்றிராணியாண்டவர் அவர்கள் குருமார்புடைசூழப் பக்தர் குழாம் பரவசமெய்தப் புதிய கோவிலை ஆசீர்வதித்து, அன்றிரவு நத்தார்த் திருவிழாப் பெரியபாடற்பூசை நிறைவேற்றுவார்கள்.

புதிய ஆசனக்கோவில் பிரவேசவைபவம் அன்று நடைபெற்ற போதிலும் கோவில் இன்னுமே பூர்த்தியடையாது குறைவேலையாய் இருக்கின்றதென்பதை மாதாவின் பக்தர்கள் நன்கறிவார்கள். அதன் பலிபீடஸ்தானமும், அதற்குமேலாய் வானளாவும்படியாக மிக உன்னதமாக எழுப்பப்படவிருக்கும் "டோம்" எனப்பெயரிய வில்மச்சுமாடமும், இருபக்கச் சிறகுகளும் ஆலய திருப்பணியில் இன்னுமே கைவைக்கப்படாது குறைவேலையாக இருக்கின்றன. கொஞ்சேஞ்சிமாதா புதியஆலயத்தில் எழுந்தருளியதும் அவரின் ஞானமக்கள் புத்துணர்ச்சியும், புதியஆர்வமுங்கொண்டு பெரிதும் உதாரகுணம்காண்பித்துக் குறைவேலையைக் கூடியவிரைவிலே நிறைவாக்கிவைப்பார்களென்பதே எல்லோரதும் குன்றாத நம்பிக்கையாகும்.

புதியஆசனக்கோவில் திருப்பணியின் இரண்டாவது பகுதியைப்பூர்த்திசெய்வதிலே—அதாவது மணிக்கோபுரத்துக்கும், மணிகள்நான்கையும் ஏற்றுவதற்கும், மேல்வேலைக்கும், பிறவற்றிற்குமாக இதுவரை 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவாகியிருப்பதாகவும், இன்னும் 8,500 ரூபா வரை பிலே கடன் இருப்பதாகவும் கட்டக்கூச்சுவாமியார் அறிவித்துத் தற்போதைய நிலையைத் தெளிவாக்குகின்றார். இப்போது பூர்த்தியடைந்து பாவனைக்குள்ளா

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)



"உன்னத ஸ்தலங்களிலே சர்வேசுரனுக்கு மகிமைப் பிரதாபமும், பூலோகத்திலே நல்ல மனதுள்ள மனுஷர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது."

கிறிஸ்மஸ் பண்டிகையின் சமாதானமும், சந்தோஷமும் அனைவரிலும் தேங்குவதாக!

* * *

அவதரித்த இரட்சகரின் ஆனந்தமும், அன்பும் அனைவர் இதயங்களிலும் நிலவுவதாக!

* * *

உலகமுழுவதும் சமாதானமும், நீதியும், சகோதரத்துவமும், சுபிட்சமும் ஓங்குவதாக!

"இதோ! எல்லாச் சனத்துக்கும் மகாசந்தோஷத்தை வருவிக்கும் சுபசெய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். அதேதெனில், இன்று தாவீதின்நகரத்தில் கிறீஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றி, முன்னிட்டியில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்."

"வாரும் வணங்குவோமே பாலனே"

"ஜெயம்"

— I —

வானவர் கரங்கள் கூப்பி
வணங்குதல் வரனே போற்றி!
மானிலத் திடையர் வாழ்த்தும்
மாடுறை குடிலாய் போற்றி!
பானில வெடுத்த மேனி
பதைக்கவெங் குளிரால் வாடும்
ஞானமென் மரியா ளீன்ற
நவரச மணியே போற்றி!

— II —

பூமுகம் செழிக்க வந்த
பூசித பாலா போற்றி!
வாமுகம் கருணை பூக்கும்
வண்மதி அழகா போற்றி!
சாமுகம் துணிந்த ஏவை
சந்ததி புரக்க வந்த
தேமுகம முறுவல் கொள்ளும்
தெய்வமே முதலே
போற்றி!

— III —

சாந்தமும் எளிய வாழ்வும்
சந்ததம் இனிமை யென்றே
வேந்தரின் வேந்தா னலும்
வெந்துயர்க் கிடையிற் பூத்தாய்!
ஏந்தலே! தேவ தேவே!
இன்னுயிர்க் குழந்தாய்
போற்றி!
காந்திசேர் மரியாள் செங்கை
கண்ணயர்ந் திடுவாய்
போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்மஸ் விழாச் சிறுகதைப் போட்டி

இரண்டாவது பரிசில் பெற்றது.

மாசற்ற காதல் வெற்றி

இந்துசமுத்திரத்தின் தென்கரையில் நொலியெக் (Nolyec) என்னும் ஓர் அழகிய தீவுஉள்ளது. அதன் தலைநகராகிய ஒப்மொலொக் (Obmoloc) பட்டினத்தில் பிரமாண்டமான ஓர் தேவாலயம் இருந்தது. ஓர்நாள் அத்தேவாலயத்தின் சாலையில் ஒருமனிதர் கந்தைஉடை அணிந்து, தாடிசடை வளர்ந்து, வறுமையின்சாயல் பதிந்தவராய்க் காணப்பட்டார். சாந்தமான பார்வை, பேசும்போதுள்ள அமைதி என்பன அவரில் எவரும் அன்புபாராட்டக் கூடியவகையில் இருந்தன. ஒப்மொலொக் பட்டினத்திலும் அவர் மூன்றுமாதம் கழித்துவிட்டார்.

மார்கழிமாதம் 16-ந்திகதி மோசேயு என்னும் அம்மனிதருக்கு மிகவும்ஆனந்தமான ஓர்நாளாகக் காணப்பட்டது. காலை திவ்வியபூசையிற் தேவநற்கருணை பெற்றுக்கொண்டார். மாலை திவ்வியபாலனின் வருகைக்கு ஆயத்தமாக நடைபெற்ற நவநாள் ஆராதனையில் வெகுஆர்வத்துடன் கலந்துகொண்டார். ஆராதனைமுடிந்து சனங்கள் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். மோசேயு ஒரு தூணின்அருகில் இருந்து செபித்துக்கொண்டிருந்தார். பசிவயிற்றைக் கிள்ளிக்கொண்டிருந்ததாலும், பழைய நிகழ்ச்சிகளைச் சிந்தித்துக்கொண்டிருந்ததாலும் சற்றுக் கண்ணயர்ந்தவர், தேவாலய மணிக்கூட்டில் எட்டு அடிக்கும் சத்தம்கேட்டுத் திடீரென விழித்துக்கொண்டார்.

அப்போது தனக்கு ஐந்தாறுயார் தூரத்தில் அழுகையும் விம்மலும் நிறைந்த ஒருசத்தம் கேட்பதைக் கவனித்தார். ஒருபெண் முக்காடிட்டு முழந்தாளில்இருந்து செபித்துக்கொண்டிருந்தாள். பாவம்! யாரோ வறுமைப்பட்டபெண் தனது வறுமையைப்பற்றி ஆண்டவரிடம் முறையிடுகிறாளாகும்என்று எண்ணினார் மோசேயு. பின்னர் தேவாலய கதவுகள் பூட்டப்படும் சத்தம்கேட்கவே அவர் எழுந்து வெளியே சென்றார். அப்பெண்ணும் தனது செபங்களை முடித்துக்கொண்டு வெளியே சென்றாள்.

* * *

நவநாளின் இரண்டாவது தினமும் ஆராதனைமுடிந்தது. மோசேயுவும், அப்பெண்ணுந்தான் தேவாலயத்தில் இருந்தனர். அவர் இருந்ததை அப்பெண் கவனிக்கவில்லை. அவள் முதல்நாளிற்போலவே பெருமூச்செறிந்து அழுது செபித்துக்கொண்டிருந்தாள். மோசேயு அவளைக் கூர்ந்து கவனித்தார். அவளுடைய கழுத்திற் தாலியும், கைகளிற் காப்புகளும் இலங்கிக்கொண்டிருந்தன. அவள் ஒரு வறியபெண் அல்லஎன்பது உடனே அவர் மனதிற்பட்டது.

* * *

நவநாளின் ஐந்தாவதுதினமும் முடிந்தது. ஆறுவதுதினம் அப்பெண் தனது இருபிள்ளைகளுடன் தேவாலயத்திற் காணப்பட்டாள். முன்போலவே வியாகுலத்துடன் செபித்துக்கொண்டிருந்தாள். அவள் கணவனுக்கு ஏதும் தீராதவியாதியாக்கும்; பாவம்! என்னதுன்பத்தைப்பற்றி ஆண்டவரிடம் அவள் முறையிடுகின்றாளோ என்று சிந்தித்தார் மோசேயு. அவளைப்பற்றி அறியவேண்டும் என்னும்ஆவல் அவர் உள்ளத்தில் எழுந்தது. அதனால் அவள் புறப்பட்டுச்செல்லும் கதவின் பக்கமாகப் போய்நின்றார். பிள்ளைகளும்தாயும் ஆலயத்தைவிட்டு வெளியேவந்தனர். "அம்மா பசிக்கிறது; நேற்றும் இன்றும் சாப்பிடவில்லை; ஏதாவது உதவிசெய்புங்கள்" என்று கேட்டார். எங்கள்வீடு அதோஇருக்கிறது; அங்குவந்தால் ஏதும்சாப்பிடலாம்என்று கூறிக்கொண்டே அவர்கள் சென்றனர். மோசேயுவும் அவர்களைப் பின்தொடர்ந்தார்.

வீடு சென்றதும் அப்பெண் தனது மகள் இசபெல்லோனுவை அழைத்து வந்தமனிதருக்கு உணவுபரிமாறுமபடி சொன்னாள். உடனே இசபெல்லோனு அம்மனிதருக்கு அன்புடன் உணவுபரிமாறினாள். உணணும்போது மோசேயு இசபெல்லோனுவிடம் அவர்களைப் பற்றி விசாரித்தார். தனது தாய்பெயர் மரிலோனு என்றும், தகப்பன் பெயர் மக்காரியு என்றும், தங்கள் சொந்தஊர் மகான்னுக் (Makannuhc) என்றும், தகப்பனுருக்கு அவ்வூரிலேயே உத்தியோகமென்றும் இசபெல்லோனு தெரிவித்தாள். உண்டுமுடிந்ததும் மரிலோனுவுக்கும், இசபெல்லோனுவுக்கும் நன்றி தெரிவித்துவிட்டு மோசேயு தேவாலயத்தைநோக்கி நடந்தார்.

* * *

நவநாளின் ஏழாவதுதின ஆராதனை முடிந்து போகும்போது மரிலோனு மோசேயுவைச் சந்தித்தாள். "நாளை மத்தியானம் வீட்டுக்குவந்து சாப்பிட்டுக்கொண்டு போகலாம்" என்று கூறினாள். மோசேயும் நன்றியுடன் வருவதாகக் கூறினார். மறுநாள் உருமத்தின்போது மரிலோனு கூறியபடி மோசேயும் அவள் வீட்டுக்குச் சென்றார். தாயும் மகளும் அவரைக்கண்டதும் அன்புடன் வரவேற்று உணவுபரிமாறினார்கள். மரிலோனு தனிமையாக இருக்கும்நேரத்தை எதிர்பார்த்திருந்த மோசேயு அவளைநோக்கி: "அம்மா, கேட்கிறேன் என்று குறைநினைக்கவேண்டாம். நீங்கள் சகலசெல்வங்களும்உள்ளவர்களாகஇருந்தும்ஏதோ பெரிய கவலைகொண்டவர்களாகக் காணப்படுகின்றீர்கள்; உங்கள் உதாரகுணத்தைக் காணும்போது உங்களுக்குள்ள துன்பம் என்னஎன்பதை அறிய என்மனம் அவாவுகின்றது. அதைப்பற்றி ஏதாவது எனக்குச் சொல்லமுடியுமானால் சொல்லுங்கள். நானும் உங்கள் கருத்துக்காகப் பாலகயேசுவை மன்றாடுவேன்" என்று கூறினார்.

மோசேயு கூறியவற்றைக்கேட்ட மரிலோனுவுக்கும் தன்நெஞ்சைப் பிளந்து கொண்டிருக்கும் துயரத்தை எடுத்துக் கூறத்தான் வேண்டும்என்ற எண்ணம் பிறந்தது. "தாங்கள் கூறுவதுபோல் எங்களுக்கு ஒரு குறைவும் இல்லைத்தான். ஆனால், எனதுமகளுக்கு இருபத்திரண்டு வயதாகின்றது. மூன்றரை வருடங்களின்முன்பு நியாயதுரந்தர் பவுலாயுஎன்பவரின் மகனும், இவ்வூர் ஆங்கிலவைத்தியசாலையில் கடமையாற்றும்வைத்தியருமான யக்கோமேயுவை அவளுக்கு மணஞ்செய்துவைக்க முனைந்தோம். இசபெல்லோனுவை மணக்க யக்கோமேயுவுக்கு ஆளவுகடந்தபிரியம். ஆனால், தான் விவாகம் செய்வதில்லை என்று இசபெல்லோனு பிடிவாதமாகக் கூறிவிட்டாள். சிலநாட்கள் செல்லவிட்டு, அவள்மனநிலை என்னவென்று அன்புடன் கேட்டேன். அவள் தன்னுடன் மகான்னுக் பாடசாலையிற் படித்தயக்கரியேசு என்பவரை மணக்க விரும்புவதாயும், அவரையன்றி வேறு எவரையும் தான்மணப்பதில்லை என்றும் சத்தியம் செய்தாள்.

"யக்கரியேசு இன்று எல்லக் (Ellag) என்னும்பட்டினத்து உயர்தரப்பாடசாலை அதிபராக இருக்கின்றார். அவரிடம் ஆட்களை அனுப்பி விசாரிப்பித்தேன். தனதுதகப்பனார் இத்தவிவாகத்துக்குத் தடையாக இருக்கிறார் என்றும், தான் மணஞ்செய்வதாயின் இசபெல்லோனுவைத்தவிர வேறுஎவரையும் மணப்பதில்லை என்றும், தங்கள்எண்ணம் கைகூடத் திவ்வியயேசுவை இரந்து வேண்டும்படியும் கூறிஅனுப்பினார். வைத்தியர் யக்கோமேயும் தனதுவிவாகம் இன்றைக்கு நடக்கும்; நாளைக்கு நடக்கும் என்று விவாகஎண்ணமாகவே இருக்கின்றார். மகளுக்குவிருப்பமில்லை என்று கூறவும் வெட்கமாக இருக்கின்றது. "இவருக்கும் வைத்தியரையே மணமுடித்துவைக்க வேண்டுமென்ற பிடிவாதம். இதுதான் எங்களுக்குள்ளகுறை" என்று கூறினாள்மரிலோனு.

மோசேயுவின்முகம் பிரபைஅடைந்தது. ஒருபெருமூச்சுவிட்டார். தான் இன்னும் எட்டுநாட்களுள் யக்கரியேசுவுக்கும் இசபெல்லோனுவுக்கும் திருமணம் நிறைவேறுதற்குரிய ஒழுங்குகள்செய்வதாகவும், தனக்கு ஐம்பது ஈபுர் (ரூபா) கொடுக்கும்படியும் கேட்டார். மரிலோனுவின் மனம் கலக்கமடைந்தது. யாரென்று தெரியவராத ஓர் ஏழைமனிதர் ஐம்பதுஈபுர் கேட்டதே அவள் திகைப்படைந்தாள். ஆனால், மோசேயு மேலும்மேலும் பேசியவார்த்தைகளில் மயங்கி, ஒருவருக்கும் தெரியாது அறைக்குள் சென்று 50 ஈபுர் கொண்டுவந்து கொடுத்தாள். மோசேயு பணத்தைப் பெற்றுக்கொண்டு, பலஉறுதிமொழிகள்கூறி வீட்டைவிட்டு வெளிகொண்டார்.

* * *

தேவாலயத்துக்கு அண்மையில் வீதியின் பக்கமாகஇருந்த தபால்பெட்டியுள் ஒருகடிதத்தைப் போட்டுவிட்டு, அந்தஆலயத்தின்சாலையில் ஒருமனிதர் உலாவிக்கொண்டிருக்கிறார். அவர் வெண்உடைகள் அணிந்திருந்தார். கட்டையாக வெட்டப்பட்ட தலைமயிரும்,

ஆசிரியர் M. V. ஆசீர்வாதம், யாழ்ப்பாணம்.

அன்றே சௌரம்செய்தமுகமும் ஐம்பதுவயதுடைய அவரின் தோற்றத்தைக் கவர்ச்சியுள்ளனவாகச் செய்தன. "ஆ! எனது மடைத்தனந்தான் என்ன? மூன்றரை வருடங்களின்முன் என்மகனே விஷங்கலவிரட்டித் துரத்தினேனே..." என்று அவர்மனம் துடிதுடித்துக்கொண்டிருந்தது.

* * *

வழமைபோல மரிலோனு நவநாள் ஆராதனைக்குச் சென்று திரும்பினாள். அவளுடைய வீட்டில் நத்தார்த்திருநாட்கொண்டாட்டம் வெகுஆர்ப்பரிப்பாக நடந்துகொண்டிருந்தது. புதுப்புதுப் புடவைகள், விளையாட்டுப்பொருட்கள், இனிய உணவுப்பண்டங்கள் எல்லாம் தேங்கிக்கிடந்தன. மரிலோனுவின்பிள்ளைகள் இருவரும் தங்களைமறந்த இன்பத்திற் திளைத்திருந்தனர். ஆனால்மரிலோனுதனதுமகளின் விவாகத்தைப்பற்றியும், தன்னிடம் ஐம்பது ஈபுர் வாங்கிய மனிதரைப்பற்றியும் சிந்தித்துக்கொண்டிருந்தாளேதவிர, அவளிடம் நத்தார்க்கொண்டாட்டம் இடம்பெறவில்லை. இசபெல்லோனு தன்உள்ளத்தைக் கொள்ளைகொண்ட மணாளனைப்பற்றியும், தந்தையின்பிடிவாதமான மனப்போக்கைப் பற்றியும் சிந்தித்தவண்ணம் தேவதாயின்உதவியையே ஒவ்வோர் வினாடியும் வேண்டிக்கொண்டிருந்தாளேதவிர, அவளிடமும் நத்தார்க்கொண்டாட்டம் இடம்பெறவில்லை. இசபெல்லோனுவின் தந்தையாகிய மக்காரியு தனது மகளின் பிடிவாதத்தையும், நியாயதுரந்தர்மகன் யக்கோமேயுவுக்கு மணவிஷயமாய் எத்தனைநாள் தவணைபோடுவது என்பதையும்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தாரேதவிர, அவரிடமும் நத்தார்க்கொண்டாட்டம் இடம்பெறவில்லை.

எல்லக்நகரில் வசித்துவந்த யக்கரியேசுவுக்கு 25-ம் திகதிகாலை ஒருகடிதம் கிடைத்தது. அதைத்திறந்துபடித்தான்.

ஒப்மொலொக்
23-12-1916.

அன்புள்ளமகன் யக்கரியேசுவுக்குத் தேவஆசிவேண்டி எழுதிக்கொள்வது: நான் எங்கிருக்கிறேன் என்று உனக்குத்தெரியாமல் இந்த மூன்றரை வருடங்களையும் கழித்தேன். திவ்வியபாலகயேசு எனது மடைத்தனத்தைப்பற்றி அற்புத அருள்செய்தார். நீ விரும்பிய புண்ணிய ரூபவதி இசபெல்லோனுவுக்கும் உனக்கும் இம்மாதம் 31-ந்திகதி விவாகம் நடந்தேற வேண்டும். என்னதடைகள் இருப்பினும் 26-ந் திகதிகாலை ஒப்மொலொக் புகையிரதஸ்தானத்தில் உன்னைக் காத்துக்கொண்டு நிற்பேன். தவறுதல்வரவேண்டும். எனது பிழையை நான் உணர்ந்தபின்பு நீ அதிகம் யோசிக்க வேண்டியதில்லை.

உனது நல்வாழ்வை விரும்பும்
பி. மோசேயு.

தனது கண்களையே அவன் நம்பவில்லை. திரும்பத்திரும்பக் கடிதத்தை வாசித்தான். கடிதம் முழுவதும் தகப்பனுலேயே எழுதிக் கையொப்பமிடப்பட்டிருப்பதை அவதானித்தான். கடவுளுக்குத் தோத்திரம் சொன்னான். ஒப்மொலொக் பட்டினம் போவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்தான். அன்றுமாலையே புகையிரதம்ஏறினான். புகையிரதத்தில் இருந்தபடியே இன்பக்கனவுகள் கண்டான். மூன்றரை வருடங்களுக்குமுன் தனதுதந்தை எந்தத் திருமணப் பேச்சினுற் தன்னைவைது துரத்தினாரோ அதே மணத்துக்குத் தன்னை அழைப்பது அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. தான் கடந்தமூன்று வருடங்களிலும் சேமித்து வைத்திருந்த மூவாயிரம் ஈபுரும் பெட்டியில்இருக்கிறதா என்று அடிக்கடி பார்த்துக்கொண்டான்..... பலதடவைகளிற் தங்கள் புன்சிரிப்புகளாலும், கண்வெட்டுகளாலும், தங்கள் மனக்கருத்தை வெளியிட்டதும், ஒருநாள் கடற்கரையிற் சந்தித்தபோது தான் இசபெல்லோனுவுடைய செவ்விதழ்களில் முத்தமிட முனைந்ததும், அவள் அதைத்தடுத்துப் புன்னகைசெய்து மெய்வீவாகத் திருச்சடங்கு நடப்பதற்கு முன் தாங்கள் ஒருவரை ஒருவர் தீண்டக்கூடாது என்று கூறியதும் ஒன்றின்பின் ஒன்றுக அவன் மனக்கண்முன் வந்துகொண்டிருந்தன.

ஒப்மொலொக் பட்டினத்தில் இறங்கி அங்குமிங்கும் பார்த்தான். தந்தையும் மகளும் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். அவர்கள் கண்களில் நீர்த்துளிகள் அரும்பின. புகையிரதஸ்தானத்துக்கு வெளியே சென்று ஒரு மோட்டர் வண்டியில் ஏறினர். வண்டியும் இசபெல்லோனுவின் வீட்டைநோக்கி விரைந்து சென்று அதன்வாயில்முன் நின்றது. இருவரும் உள்ளேசென்று மக்காரியுவை விசாரித்தனர். மரிலோனு அங்குவந்தபுதியவர்களை ஆசனங்களில் அமரச்செய்து "அவர் வெளியே போய்விட்டார். ஒருமணித்தியாலத்துள் வருவார்" என்று கூறி, வந்தவர்களுக்குத் தாம்பூலம் கொண்டுவர உள்ளே சென்றாள்.

அங்குவந்த புதியமனிதர் இருவரையும் சாளரத்தின் வழியாகக் கண்டாள் இசபெல்லோனு. தனது கண்களையே நம்பாமல் ஒருமுறை அவற்றைத் துடைத்து விட்டுத் திரும்பவும் பார்த்தாள். அவர்தான், வேறுஎவருமல்ல.....அவள்மனம் குதூகலம் அடைந்தது. தாயிடம் ஓடினாள். வந்திருப்பவர்கள் யார் என்றுவினவினாள். அவர்கள் யார்என்று தனக்குத் தெரியவில்லைஎன்றும், உனது தந்தையிடம் ஏதோ அலுவலாக வந்திருக்கிறார்கள் என்றும் மரிலோனு கூறினாள். இசபெல்லோனு தாயைப்பார்த்து: "இவர்தான் அம்மா எல்லக்நகரத்து....." என்று கூறியது கூறுமுன் "உண்மைதானு?" என்றுமரிலோனு ஆச்சரியத்துடன் கேட்டாள். தாம்பூலத்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க சமாச்சாரம்

வேதசாட்சியாக மரணித்தார்

சீனதேச இவேய்ங்கரிலுள்ள சென் இக்னேஷஸ் கல்லூரியின் அதிபரான யேசுசபையைச் சேர்ந்த வண. பீடாசாய்ங் சுவாமியார் தங்களுக்கு அதிகம் விசுவாச பிரமாணிக்கமுள்ள ஊழியர்களில் ஒருவரென்று சீனக் கம்யூனிஸ்தர்கள் நாடெங்கும் பறைசாற்றினர்கள். பிறநாட்டு அரசாங்கம் ஒன்றுவந்து தலையிடுவதை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் அவர் ஓர் சிறந்த கத்தோலிக்க தலைவரென்று பத்திரிகைகளிலும், ஆகாயவசனிகளிலும் பெருமூழக்கஞ் செய்தார்கள். ரோமாபுரியின் இணைப்பிலிருந்து பிரிந்துவிடத்தேடும் சீனச் "சுதந்திரகத்தோலிக்க திருச்சபை" இயக்கத்தின் தலைவரென்று அவரைப் புகழ்ந்தார்கள். ஆனால், கம்யூனிஸ்தர்கள் இவ்வாறெல்லாம் ஆர்ப்பாட்டங்கள் செய்துகொண்டிருக்கும்போது வண. சாய்ங் சுவாமியாரோ கம்யூனிஸ்த சிறைச்சாலை ஒன்றில் இருக்கின்றார். ஏனெனில், இந்தப்பிரிவினை இயக்கத்துடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டதற்காகவே. அவர்மறுத்துவிட்டது மாத்திரம்அல்ல, அதனைஎதிர்த்துப் பிரசங்கமுஞ் செய்தார். இப்போது அவர் தேசத்தைச் சதிமானமாகக் காட்டிக்கொடுத்தாரென்று பிரசித்தமாக அறிவிக்கப்பட்டு ஓர்வேதசாட்சியாக மரணமடைந்திருக்கிறார்.

கத்தோலிக்க வானொலிநிலையம்

சென்றகார்த்திகைமாதம் 1-ந்திகதி யப்பானிய தலைநகரான ரோக்கியோவில் பிரமாண்டமானஒலிபரப்பி நிலையம்ஒன்று திறந்துவைக்கப்பட்டது. இது 10,000 வாற் சக்திகொண்டது. இது வத்திக்கானுக்கு இரண்டாவதாக உலகிலேயே கத்தோலிக்க நிலையங்களுக்கு நாயகமாய் விளங்கும். அர்ச். சின்னப்பர் சபைக் குருமாரில்ஒருவரான வண. ஜியோவான்னி சியேசா சுவாமிகள் தலைமையில் இது இயங்கும். இதன்பெயர் BHK-பங்கா ஹோசோகியோகாய். அதாவது, கலாசார ஆகாசவாணிஎன்பது. தினம் 17 மணிநேரம் யப்பானிய பாஷையில் கலாசார, தேசிய, உலகநிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும். யப்பானிலே 15 அல்லது 20 ரூபாவிலையுள்ள நயமான சிறிய ரேடியோக்கள் ஏறக்குறைய எல்லாவீடுகளிலும் இருப்பதால் இந்தக்கத்தோலிக்க ஒலிபரப்பி மிகுந்த நன்மை விளைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

நூஷிய உத்தானகீதம்

ரூஷியதலைநகரான மஸ்கோவிலுள்ள பொதுவுடைமைச் சதுக்கத்திலே கடவுள் இல்லையென்ற நாஸ்திகசங்க பேச்சாளர்ஒருவர் பெருஞ்சனக்கூட்டம் ஒன்றில் பேசியபோது: "கடவுள்ஒருவர் இருக்கிறாரென்று அத்தாட்சிப்படுத்த இங்குளவராவது சித்தமாய் இருக்கின்றீரா?" என உத்தண்டத்துடன் வினவினர். "ஆம், இதோ நான் இருக்கிறேன்" என்று கிராமவாசிஒருவர் கையைஉயர்த்திக் கொண்டு சட்டெனமேடையில் ஏறிச்சனக்கூட்டத்தை நோக்கி: "யேசுக்கிறீஸ்துநாதர் உத்தானமானார்" என்ற ரூஷியாவின் புராதன ஈஸ்டர்வாழ்த்துக் கீதத்தை மணியோசைநிகர்த்த தொனியில் உரத்துப்பாடினார். அக்ஷணமே சனக்குழாமின் மத்தியிலிருந்து "உண்மையாகவே அவர் உத்தானமானார்" என்ற பழைய உத்தரம் இடிமுழக்கமென்னப் பலமாகஎழுந்தது. மறுவார்த்தை ஒன்றுமில்லாமலே அக்கிராமவாசி மேடையைவிட்டுக் கீழேஇறங்கினர்.

விடுதலை செய்யப்பெற்றார்

மாஷல் ரிற்ரோவைச் சர்வாதிகாரியாகக்கொண்ட கம்யூனிஸ்த யூகோசிலேவியாவிலே, சாகிறெப்ரகர் அதிமேற்றிராணியாரான மொஞ். அலோயிஸ் ஸ்ரெபினக் ஆண்டவர் இம்மாதம் 5-ந்திகதி அந்நகரிலிருந்து 60 மைல் தூரத்திலுள்ள லெபோகிளாவா சிறைச்சாலையினின்றும் விடுதலைசெய்யப் பெற்றிருக்கின்றார். அதில்இவர் 1946-ம்ஆண்டுமுதல் சிறை வைக்கப்பட்டார். என்னாலும் சிலநிபந்தனைகளோடுதான் இவர் விடுதலைசெய்யப் பெற்றுள்ளனர். தற்போது 53 வயசுடையவரான ஸ்ரெபினக் அதிமேற்றிராணியார் யுத்தகாலத்தில் ஜேர்மனியர்களுடன் ஒன்றுபட்டுநின்றாரென்ற அபாண்டமான குற்றச்சாட்டின்பேரிலே 1946-ம்ஆண்டு ஐப்பசிமாதம் விசாரணைசெய்யப் பெற்றுப் பதினாறுவருட சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றிருந்தார்.

ஸ்தானீகர் சொல்லுகின்றார்

மஸ்கோநகரிலே சமீபகாலம்வரை பிரித்தானிய அரசின் ஸ்தானீகராகவிருந்த சேர் டேவிட் கெல்லி அவர்கள் லண்டன்நகரிலே கூட்டம்ஒன்றில் பேசியபோது ரூஷியாவிலே சமயங்களின் நிலைமைகளைக் குறித்து எடுத்துக் கூறியிருப்பது வருமாறு: அமெரிக்கஸ்தானீகரது காரியாலயத்தின் கத்தோலிக்க விசாரணைக்குரியவர் மஸ்கோவிலே இன்னும் எஞ்சியுள்ள ஒரேயொரு கத்தோலிக்க கோவிலில் திவ்வியபூசைநிறைவேற்ற அனுமதிக்கப்படுவதில்லை. இந்தக் கோவில் தற்போது திருச்சபைக்கு விசுவாசபிரமாணிக்கமற்ற ஓர் லிதுவானிய குருவின் பொறுப்பில் இருந்து வருகிறது. பிரசித்தவேதகலாபனைக்கொள்கையைச் சோவியற்அரசு இப்போது நீக்கிவிட்டிருக்கிறது. குருமாரின் செல்வாக்கு அழிக்கப்பட்டபோதிலும் வயதுசென்றவர்கள் தங்கள் சமயத்தை அனுசரிக்கச் சோவியற் கொள்கை அனுமதித்திருக்கிறது. ஆனால், வாலிபர்கள் நாஸ்திகக்கல்வியாலும், லோகாயதவிருத்தியாலும் சமயஅனுஷ்டானங்களை மறப்பித்து விடப்பட்டிருக்கிறார்கள். சோவியற் ரூஷியாவில் பெருந்தொகையான முஸ்லீம்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய பிள்ளைகள் சமயமின்றியே வளர்ந்துகொண்டு வருகிறார்கள்.

ஆகமனத்திற்குப் பக்குவம் ஆகு நீ மனமே!

பரகதியிலும், நரர்கதியிலும் நிகழ்ந்துள்ள சம்பவங்கள் அனைத்திலும் முதன்மையான தாய் எம்உள்ளத்தை அருட்டி எழுப்பி ஈர்த்தீர்த்து என்பையேஉருக்கவல்ல உன்னதமான அரியசம்பவத்தை ஆவலுடன் சற்றேநிந்திப்போம். நவவிலாசசபைத் தூதர்குழாம் அத்தனையும் பணிந்தேற்றி இறைஞ்சிநிற்க, பரமபிதாவானவர் தமது பரலோகசிம்மாசனத்தில் வீற்றிருந்தார். அவருடையவலது பாரிசத்தில் வீற்றிருந்த திவ்வியசுதனவர் தேவபிதாவின் திருவடிகளை வணங்கிநின்று சொல்லுவார்:

அன்பேஉருவான அருளைப் பிதாவே! ஐயாயிரத்துஇருநூறு ஆண்டுகளாக ஆதிபிதாச்சனும், தீர்க்கதரிசிகளும, தேவசிந்தையுள்ள மானிடர்களும் தம்மை ஏறெடுத்து, நெட்டுயிர்த்து, அழுதுபிரலாபித்துச் செய்தவேண்டுதலினால் தமதுகருணையும், தயையும் மானிடசென்மத்தின் மேல் இறங்கும்காலம் இதோ! வந்துவிட்டது. "வாரும், எழுந்தருளும், எம்இரட்சகரே! தாமதஞ்செய்யாதேயும். உமதுவல்லமைஅனைத்தையும் பூண்டுவாரும்....வானங்களே! குளிர்மையான பனியைப் பெய்யுங்கள்! முகில்களே நீதிபரனை இறங்கச்செய்யுங்கள்! பூமிமலர்ந்து இரட்சகரைப் புட்பிப்பதாக!" என்று இடையறாது அவர்கள்புலம்பியழுது வேண்டினர்களே. பிதாவே! ஆதாமின் சந்ததிமேல் உற்றசாபம் நீங்கவேண்டும். அதன்கண்ணீர் துடைக்கப்படவேண்டும். ஏவாளின்துயர் அகற்றப்படவேண்டும். பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து மனுக்குலம் விடுதலையாகவேண்டும். தமக்குச்செய்யப்பட்ட நிந்தைக்குத் தகுந்தபிராயச்சித்தம் செய்யப்படவேண்டும். பரகதியின்கபாடங்கள் மறுபடியும் மனிதருக்குத் திறக்கப்படவேண்டும். தமதுஅணைகடந்த இரக்கப்பெருக்கத்தால் பூவுலகம் மறுமலர்ச்சி அடையவேண்டும். "புத்தகத்தின்தலைவரியில் எழுதப்பட்டபடி நீர் எனக்கோர் மானிடசரீரத்தைச் சாத்திவிட்டீர்." தேவே! காருண்ணியபிதாவே! உமது திருவுளத்தை என்சிரமேற்கொண்டேன். நீர் இட்டபணியை நான் பரிபூரணமாகச்செய்யவேண்டும். அரவும் தவறாது தமதுதிருச்சித்தத்தை நான் நிறைவேற்றவேண்டும். தொண்டனாக எழுகின்றேன் பிதாவே! தமது அன்பின்உருவாய்ச் செல்கின்றேன்கோவே! நான் போய்வருகிறேன் பிதாவே! என்னைத் தமதுதிருக்கரங்களால் ஆசீர்வதித்து விடையருள் வீராக என்று வேண்டிப்பணிந்தார் திவ்வியசுதன்.

மனிதமுறையாலே, மனிதவாக்காலே இதைஎவ்வாறு விபரிப்பது? விபரிப்பின் — பிதாவின் திருவிழிகளில் இருந்து அன்பேஉருகி முத்துகளெனச் சில நீர்த்துளிகள் விழுந்தன. வானவர்சேனை மனவருட்கியினால் கனிந்துவிட்ட பெருமூச்சானது சமுத்திரஓசையென இரைந்து ஊதிப்பரகதியினூடாகச் சென்று அடங்கியது. அன்பினூற்றேங்கி மனம் நெக்குவிட்டுருகிய பிதாவானவர், திருக்குமாரனை வாரிஅணைத்துத் தமதுமார்புடன் இறுகத்தழுவி, முகத்தோடுமுகம்வைத்து மீண்டும்மீண்டும்முத்தாடிப் பொங்கியெழுந்தபாசத்துடன் அவரை ஆசீர்வதித்து, "மகனே! என் அருமைச் சுதனே போய்வா" என்று சோகத்துடனும், அதிகாரத்துடனும் மொழிந்து விடைகொடுத்தனுப்பினர்.

விடைபெற்ற திருமகனர் தமது பரமபிதாவின் அரவணைப்பையும், தமக்கே உரியதான மோட்சமகிமைப் பிரதாபங்கள் அனைத்தையும் ஒதுக்கிவைத்துத் தமது சொந்தத் தேயத்தை நீத்து, ஒருவிதத்திலே ஊதாரிப்பிள்ளை வேடம் பூண்டு, பாழடைந்து கிடந்த அன்னியதேசமாகிய இந்தப் பூமியை நாடிவந்தார். தவித்துத்தவித்துவந்து இத்தாரணியில் உதித்தார். "வார்த்தையானது மாமிசமாகி எங்களுடனேகூட வாசமாய் இருந்தது." பூதலம் பூரித்துமலர்ந்தது. நரகம் நடுநடுங்கியது. நீதியின்சோதி உதித்தது. அமலபரன் மானிடனாக வந்து பிறந்தார்.

அண்டப்படாத ஒளியில்வசிப்பவர், பரஞ்சோதியானவர், மனிதன் தனதுஊனக்கண்களிலே தெய்வீகத்தைக்கண்டு தம்மை அண்டவேண்டும் என்பதற்காகவே மானிடசட்டை சாத்திப் பூமியிற்பிறக்கச் சித்தமானார். வறுமையின்வடிவமாய் வந்துபிறந்தார். அதற்கும் மாடாடொதுங்கும் குகையையே தெரிந்துகொண்டார். அவதரித்தநாதன் எங்கட்கு அரும்பெரும் மருந்துமூலியாக, குருவாக, தொண்டனாக, அன்பராக, இரட்சகராக வந்துஇறங்கினார்.

மருந்துமாமூலியானார். அகங்காரவெறியைத் தமது தாழ்மையினாலும், சாந்தத்தினாலும் குணமாக்கினார். பணவாஞ்சைப் பைத்தியத்தைத் தமது வறுமையினால் மாற்றினார். அவ

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

பரிமேலர் எஸ். அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
பாதுகாவலன்
1951-ம் ஆண்டு
மார்கழிமாதம் 20-ந்திகதி

நத்தார் மகோற்சவம்

மூவுலகங்களையும் மூவாதஅன்போடு பரிபாலிக்கும் மூவாமுதல்வன் பாவத்தாலே கெட்டுப்போன மானிடகுலத்தை இரட்சிக்கத்திருவுளமாகின்றார். மானிடருள் ஒரு மானிடனாய்வரக் கருணைகூர்ந்து, மூப்போதும் கன்னிகையின் திருவுதரத்தில் அற்புதவிதமாக உற்பவிக்கின்றார். மஞ்சொளிரும் மணிமாளிகையில்அல்ல, ஆனால், மாடாடுறையும் ஓர் எளியகுகையில் பிறக்கின்றார். பஞ்சணைமெத்தையில்அல்ல, ஆனால், ஓர் புல்லணையில் வளர்த்தப்படுகின்றார். குளிரால்வாடிக் கொடுகுகின்றார். பசியால்வாடிக் கதறுகின்றார். அப்போது திருக்கன்னித்தாய் திவ்வியகுழந்தையைத் தமது மலர்க்கரங்களால் வாரியணைத்துப்பள்ளிக்கொள்ள வைக்கின்றார். அவ்வாறு கண்ணயர்கின்ற தேவகுழந்தையின் வடிவழகைக்கண்டு திருக்கைத்தாதையான சூசைமாமுனிவர் உணர்ச்சி ததும்பியவராய்த் தேவதுதிகளைப்பாடத்தொடங்குகின்றார்.

கண்பட்டுறங்கக் கண்டேனே
கருணை கரனேகளிக்கடலே
புண்பட்டுளையும் நெஞ்சிற்கோர்
பொருவா மருந்தே அருள் அன்பே
மண்பட்டலையும் கடலன்ன
மருள்என் நெஞ்சிற் குயிர் நிலையே
எண்பட்டுயர்ந்த செல்வரசே
எம்மேல் இரங்கும் தயைஇதுவோ.

அதாவது: கருணைபிறப்பதற்கு இடமானவனே! பேரின்பக்கடலே! நீ உன் திருவிழிகளைமூடி உன்தாயின் திருக்கரங்களில நித்திரைசெய்ய உன்னைப் பார்த்தேனே? புண்போலத்துன்பப்பட்டுவருந்தும் என்மனதைக் குணப்படுத்தவல்ல ஒப்பில்லாத ஓர் தேவமருந்தே! அருளால்நிறைந்த அன்பே! இப்பூவுலகைச்சூழ்ந்துநிலையற்று அலைகின்றகடலைப்போல மயங்கிஅலையும் என்மனத்திற்கு உயிர்நிலையே! மதித்தற்கரிய உயர்ந்த செல்வங்களையுடைய அரசனே! எங்கள்மேல் நீ இரக்கங்கொண்டு காட்டின தயை இதுவாமோ என்பதே. இவ்வாறு தேம்பாவணியிலே மகாவருள்படலத்தில் பல அருமையான பாக்களைக்காணலாம்.

நிற்க, நாமும இந்தவேளை நமதுமனக்கண்ணால் இந்தமனோகரகாட்சியைத் தரிசிப்போம். பாலகயேசுவை மனமொழிமெய் ஒன்ற வழிபட்டுத் துதிப்போம். தேவாதிதேவனும், இராசாதிராசனுமாகிய அவர் தமதுஆனந்தமோட்ச பாக்கியத்தைவிட்டுப் பூமியில் இறங்கி நம்மைச்சந்திக்கவந்தபோதே அது நமக்கெல்லாம் எத்துணைபெரும் பாக்கியம் என்பதைச் சிந்திப்போம். அன்புமயமான தேவன் தம்மை மனுஷர் கண்டுகொள்ளாமல் சரிவரநேசிக்கமாட்டார்கள் என்றுற்போல அன்பிலுல்வசீகரப்படக்கூடிய குழந்தைவடிவாய் மானிடகோலந்தாங்கிப் பிறந்திருப்பதைத் தியானிப்போம். அவ்வாறு தியானிக்கும்போது நாம் கற்றுக்கொள்ளவேண்டிய ஞானம்பெரிது என்க.

தேவபாலன் பிறந்தினம் 'கிறிஸ்மஸ்' என்று உலகமுழுவதும் கொண்டாடப்படுகிறது. இதுவரும்போதெல்லாம் திருச்சபை தேவபாலன்பிறந்தகுடிலை நமக்கு ஞாபகப்படுத்தி அதிலே புதைந்துகிடக்கும் ஞானத்தை அள்ளிப்பருகுமாறு நம்மை அழைக்கின்றது. அதைக்காணும்போது தேவசுதனின் மனுஷாவதாரத்தை நாம் நினைக்கவேண்டும். அங்கு நிகழ்வது ஓர் புதியசம்பவமாக நமக்குக்காட்சியளிக்கவேண்டும். எளிமைமிகுத்த இடையர்களையும், பக்திநிறைந்த இராசாக்களையும்போல நாமும் குழந்தையேசுவை ஆராதிக்கவேணடும். செபத்தாலும், தபத்தாலும், பச்சாத்தாபத்தாலும் நமது இருதயங்களிலும் அவர்வருகைக்குச்சித்திஞ்செய்யவேண்டும். அவ்வாறு இந்தச் சோபனகாலமாகிய கிறிஸ்மஸ் காலத்தை எல்லோரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென ஆசித்து, நமது பத்திரிகைச் சந்தாதாரர்களுக்கும், நிருபர்களுக்கும், அபிமானிகளுக்கும் கர்த்தரிலே சுகமும் ஆசீர்வாதமும் விரும்பி நத்தார்ச்சோபனங் கூறுகின்றேம்.

1951-ம் ஆண்டு

அன்று 1951-ம் ஆண்டு பிறந்தபோது நாமெல்லாம் புத்தாண்டு பிறந்ததுஎன்று மனம்பூரித்து ஆர்ப்பரித்தோம். ஆனந்தமாக அதனை வரவேற்றோம். ஆடினோம். பாடினோம். கொண்டாடினோம். இன்றோ அது சமாதியடைந்துகாலம் வருவதை அறிந்தும் அறியாதார்போன்று, அதனைப்பயணமனுப்பத்தானும் நினையாதார்போன்று, அடுத்த புதுவருடம் எப்போதுபிறக்குமென்று நாள் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் "இன்னர்பிறந்தஆண்டு இது," "இன்னர்இறந்தஆண்டு இது," "இன்னஇன்னசமபவம் நிகழ்ந்தஆண்டு இது" என்பனபோன்றவைகளை மாத்திரம் நமது ஞாபகத்தில் அழுத்தமாகவைத்துக்கொள்ளுகிறோம். அதனால் வருடம் மறைந்தபோதிலும் அவ்வருடத்தில் நடைபெற்ற சம்பவங்கள் இதிகாசங்களிலும், ஞாபகத்திலும இடம்பெற்று அழியாது நிலைத்துவிடுகின்றன.

இதோ மறையவிருக்கும் வருடத்திலும் சரித்திரத்தில இடம்பெறக்கூடிய அரியசம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன. வைதிக விஷயமாய் நோக்குமிடத்து, பரிசுத்தவருடம் ரோமாபுரிக்கு வெளியே பிரகடனஞ் செய்யப்பெற்றுக் கத்தோலிக்க உலகமுழுவதும் யூபிலிப்பலனை அடைந்து கொள்வதற்கான அரியசந்தர்ப்பம் இவ்வருடத்திலே கிடைக்கப்பெற்றோம். அர்ச். மரியா ஜியோவன்னல்லி, அர்ச். மரியா பிளாஞ்சி, அர்ச். இக்னேசியோ தாலாக்குனி, அர்ச். எமிலியே தேவியாலர், அர்ச். மரியா மஸாறெல்லா என்னும் ஐந்து புதியஅர்ச்சிய சிஷ்டர்களையும், முத். பத்தாம். பத்திநாத பாப்பானவர், முத். மரியதெரேஸ் குடோர்க், முத். போல் மொஞ்ஞேயிர், முத். தொங்கின்நாட்டு 25 வேதசாட்சிகள், முத். பிரான்செஸ்கோ புசானி, முத். கார்சியா சாம்பெட்றே, முத். அல்பெறிக்கோ கிறெசிற்றூலி முதலாம் மூப்பத்தொரு முத்திப்பேறு பெற்றவர்களையும் திருச்சபை இவ்வருடத்திலே கண்டடைவதாயிற்று. இலங்கை அப்போஸ்தலரான ஆசா. யோசேவாஸ் குருமுனிவரின் ஜனன மூன்றும் நூற்றாண்டுவிழா இவ்வருடம் சித்திரை 21-ந்திகதி வந்து போயிற்று. பாத்திமாபதியிலே பரிசுத்தவருட முடிவுவிழா ஐப்பசி 13-ந் திகதி பிரஸ்தாபமாகக் கொண்டாடப்பட்டலாயிற்று. யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே காலங்கண்ட இரு குருமுனிவர்களான வண. லூயிஸ் கிற்றோ சுவாமியாரினதும், வண. செலஸ்ரின் மார்ஜெறி சுவாமியாரினதும் குருத்துவ தங்க யூபிலியையும், வண. எஸ். ஜே. வேதநாயகம் சுவாமிகளின் குருத்துவவெள்ளி யூபிலியையும் காணவைத்து நம்மைக்களிக்கச் செய்த இவ்வருடமே பெரிய கல்விமானாகிய வண.கே. செபஸ்ரியன் சுவாமிகளின் மறைவையும் காணச்செய்து நம்மைக் கவலைகொள்ளவும் செய்வதாயிற்று.

உலக விஷயமாய் ஆராயுமிடத்து, உலகமக்களும், ஐக்கிய சுதந்தர நாடுகளும் காணஆசிக்கின்ற உலக சமாதானத்தை இந்த வருடமும் தட்டிக்கழித்து விட்டது. கோரியயுத்தத்தின் கோரமும், அங்கு நடைபெறும் யுத்தநிறுத்த சம்பாஷணையும் அணுமாரின் வால்போல் நீடிப்பதாகிவிட்டது. சான்பிரான்சீஸ்கோவிலே யப்பானிய சமாதான உடன்படிக்கை இவ்வருடத்திலேயே வெற்றிகரமாக நிறைவேறியது. பிரித்தானியிலே யுத்தகால பிரதமர் திரு. வின்ஸ்றன் சேர்சில் அவர்கள் திரும்பவும் பிரதமராக வரச்செய்ததும், எகிப்திலும், பார்சீகத்திலும் பெருந்தகராறுகளை எழச்செய்ததும், பாகிஸ்தான் பிரதமரும், யோர்தான் அரசரும், மற்றுஞ்சில அரசியற்தலைவர்களும் சதிமானமாக உயிரிழக்கச்செய்ததும், ரஷியாவின் ஆக்கிரமிப்பிலிருந்து தப்பிக்கொள்ளுமாறு அத்திலாந்திக், பசிபிக்ஒப்பந்தங்கள்நடைபெறுவதைக் காணச்செய்ததும் இந்தவருடமேயாகும். இவ்வாறான பலசம்பவங்களையும் நமக்குத் தந்து கொண்டிருந்த வருடமானது இதோ மறையப்போகின்றது. கருணையங்கடவுள் மிகுந்த கிருபைபாலித்து அருளச்சித்தமாகும் 1952-ம் ஆண்டாகிய புதுவருடம் பிறக்கப்போகின்றது. இந்தப்புதுவருடத்தையும் அவர் நமக்கு அருளத் திருவுளங்கனிந்ததற்காக நாம்பெரிதும் சந்தோஷமும், நன்றியறிதலுமுடையவராய்ப் பத்திரிகைச் சந்தாதாரர்கள், அபிமானிகளாயிருந்து இதனை ஆதரித்துவருகிறவர்களுக்கும், தமது பாரமான கடமைகள் மத்தியிலே விஷயதானங்கள் செய்துவருகின்றகுரவர்களுக்கும், அறிஞர்களுக்கும்கர்த்தரிலேசுகமும், ஆசீர்வாதமும்விரும்பிப் புதுவருடசோபனம் கூறுகின்றேம்.

சுதேச வர்த்தமானம்

நம்பத்திரிகை

நத்தார்-புதுவருடப் பிறப்பு விடுமுறை காரணமாக நம்பத்திரிகை அடுத்த 27-ந்திகதியும், 3-ந்திகதியும் வெளிவரமாட்டாது

நம்அச்சியந்திரசாலை

நத்தார்-புதுவருடப்பிறப்பு விடுமுறை சம்பந்தமாக நமது அச்சியந்திரசாலை இம்மாதம் 24-ந்திகதி திங்கட்கிழமை தொடக்கம் வருகிறதைமாதம் 2-ந்திகதி புதன்கிழமை முடிகிறவரையிலே மூடப்பட்டிருக்கும். 3-ந்திகதி வியாழக்கிழமைவழமைபோல வேலைஆரம்பமாகும்.

கல்லூரிவிடுமுறை

சம்பத்திரிசியார் கல்லூரியின் நத்தார்-புதுவருடப்பிறப்பு விடுமுறை சென்ற 18-ந்திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாயிற்று. வருகிறதைமாதம் 15-ந்திகதி செவ்வாயன்று மறுபடியும் கல்லூரி ஆரம்பமாகும்.

யா. மே. சேமலாபசங்கம்

யாழ்ப்பாண மேற்றிராசன சேமலாபசங்க காரியாலயம் நத்தார் புதுவருடப்பிறப்பு விடுமுறையையிட்டு மார்கழிமாசம் 25-ந்திகதி தொடக்கம் தைமாசம் 2-ந்திகதி முடிகிறவரையில் பூட்டப்பட்டிருக்கும்.

சிறுகதைப் போட்டி

பாதுகாவலன் "கிறிஸ்மஸ் விழாச்சிறுகதைப் போட்டி"யில் இரண்டாவது சிறுகதை இற்றைப்பிரசுரத்திலே "மாசற்ற காதல் வெற்றி" எனும் தலையங்கத்துடன் இரண்டாம்பக்கத்தில் வெளிவருகின்றது. இதனை எழுதி இரண்டாவது பரிசில் பெற்றுள்ள யாழ்ப்பாணம், ஆசிரியர் எம். வி. ஆசீர்வாதம் அவர்களுக்கு நமது வாழ்த்து உரித்தாகுக!

தமிழ்எழுத்தாளர் போவை

நம்பத்திரிகையிலே முன்னர் வெளிவந்தபிரகாரம், தமிழ் இலக்கியகழக ஆதரவிலே கத்தோலிக்க தமிழ்எழுத்தாளர் பேரவை இம்மாதம் 27-ம் 28-ம் 29-ம் திகதிகளிலே தூத்துக்குடி நகரில் கூடவிருக்கிறது. 27-ந்திகதி பிற்பகல் 6 மணிக்கு முதன்முதலாக அது கூடும்போது, தூத்துக்குடி மேற்றிராணியாரான மகாவந். பிரான்சீஸ் ரோச் ஆண்டவர் வரவேற்புரையும், உயா திரு. பரிஸ்டர் எம். இரத்தினசாமி, எம். ஏ. அவர்கள் தலைமையுரையும் நிகழ்த்துவார்கள். புலவர் எம். பி. மஸ்கரின்ஞாஸ் அவர்கள் வாழ்த்துப்பா படிப்பார். தமிழ்இலக்கியகழக செயலாளர் சுவாமி சேவியர் தனிநாயகம் அவர்கள் நிகழ்ச்சிநிரலையும், செய்திகளையும் படித்துக் காட்டுவார். அடுத்தஇருதினங்களிலும் பேரவைகூடும்போது அறிஞர்பலரும், பல்வேறு பொருள்கள்பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேஷ றெயின்வண்டிகள்

நத்தார்த்திருநாள் விடுமுறையையிட்டு, றெயில்வே அதிகாரிகள்விசேஷறெயில்வேப்போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர். இம்மாதம் 22-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்குக் கொழும்பிலே கோட்டைஸ்டேஷனிலிருந்து ஓர் விசேஷ றெயின்வண்டி புறப்பட்டு மறுநாட்காலை யாழ்ப்பாணம் வந்துசேரும். பின்னர் வருடப்பிறப்புத் தினமன்று பிற்பகல் 4-55 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து ஓர்விசேஷ றெயின்வண்டி புறப்பட்டு யாழ்ப்பாணங்கண்டு மறுநாட்காலை கோட்டை றெயில்வேஸ்டேஷன் போய்ச்சேரும்.

கத்தோலிக்க சேவை

மூத். பத்தாம் பத்திநாதரும், 12-ம் பத்திநாதரும் வெளியிட்ட பிரசுரங்களை அடிப்படையாகக்கொண்டு "கத்தோலிக்க சேவை"பற்றிப் பலாலி, அரசினர் ஆசிரியகலாசாலை அதிபர் திரு. பி. சவிரிமுத்து அவர்கள் சென்மாட்டீன் குருமடத்து மாணவருக்குச் சென்ற 6-12-51 ஞாயிறன்று ஓர் அரியசொற்பொழிவாற்றினார். அவர் தமதுசொற்பொழிவில் கத்தோலிக்கசேவையின் அவசியம், நோக்கம், வகைகள், அவற்றால்வரும் நன்மைகள் ஆதியவற்றை மிகவிரிவாய் எடுத்து விளக்கினார். குருமடத்தலைவர் வண. A. சார்ள்ஸ் நவரத்தினம் சுவாமியாரும், சிலமாணவரும் சொற்பொழிவாளருக்கு நன்றிகூறினர்.

மாணவர் பூமிசாஸ்திரம்

புதுமுறையில் நிறைந்தவிஷயங்களும், விளக்கப்படங்களும், காட்சிப்படங்களும் உடையனவாய்க் கற்போர், ஆசிரியர் இருபாலார்க்கும் மிக உதவியானவை.

	ரூ.	ச.
இரண்டாம் வகுப்பு	-50	
மூன்றும் வகுப்பு	-60	
நான்காம் வகுப்பு	-90	
ஐந்தாம் வகுப்பு	1-15	

கிடைக்குமிடம்:

அர்ச். பிலோமினு அச்சகம்,
102, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"

உங்கள் பிள்ளைகள்

கணித பாடத்திற் கேட்டிக்காரர் ஆகவேண்டுமா?

அவரவர் வகுப்புக்குரிய

"படிமுறைக் கணிதத்தை"

உடனேயே வாங்கிக் கொடுங்கள்

3-ம்வகுப்பு படிமுறைக் கணிதம் ரூபா 1-40.

4-ம்வகுப்புப் படிமுறைக்கணிதம் ரூபா 1-60.

5-ம்வகுப்புப் படிமுறைக்கணிதம் ரூபா 1-80.

(எல்லாப் புத்தக வியாபாரிகடளிலும் கிடைக்கும்)

—சமீபத்திலேபோர்த்துக்கேயயாத்திரிகள் கோஷ்டிஒன்றுக்குப் பரிசுத்தபாப்பரசர் பேட்டியளித்தார். அதன்முடிவிலே மனோற்சாகமும், பேராபிமானமுங்கொண்ட யாத்திரிகர்ஒருவர் "பாத்திமாராயகியின் பாப்பரசர் நீடுழிவாழ்க" என்று ஆர்ப்பரித்தார். அப்போது பரிசுத்தபிதா புன்னகையுடன் நாம்அப்படித்தான் இருக்கிறோம்என்று பதிலளித்தார்.

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் புதிய ஆசனக்கோவில் பிரவேச திருவைபவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் பாகம்யாதெனில், ஆலயத்தின் நடுப்பகுதியும் முகப்புமேயாகும். மதாவின்நிகரற்றமாட்சிமைக்கு யோக்கியமானதாய், மற்றெல்லாத் தேவாலயங்களுக்கும் நடுநாயகமாய் ஓர்காலம் இலங்கப்போகும்புதியஆசனக்கோவில் பூர்த்தியானதைச் சீவியகாலத்திலேயே கண்டுகொள்ளவேண்டுமென்ற தீராத பெருங்காதலைப் பரிசுத்த கொஞ்சேஞ்சித் தாயார் தமது பக்தர்களின் இதயங்களில் எழச்செய்வாராக! அதற்கு வேண்டிய பணத்தை எல்லாரும்தாராளமனத்துடன் தாமதமின்றியேஉதவிச் சித்தியோடுமுடித்தருளத் தயை பாலிப்பாராக!

மாசற்ற காதல் வெற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தக்கு வந்தவள் தேரும்கொண்டு அவர்கள்முன்சென்று அவற்றைக் கொடுக்கும்போது: "நீங்கள் எல்லக்ஙகரில் இருந்து....." என்று கேட்குமுன்னமே வந்தபெரியவர் "ஆமாம் இவர்தான் எனதுமகன் யக்கரிசேயு. மூன்றரை வருடங்களின்முன் உங்கள் மகளை....." . "ஓ! கடவுளுக்குத் தோத்திரம். இருவரும் ஒருமனப்பட்டு நிற்கும்போது நாம் ஏன்இடையில் நின்று தடுத்துக்கொண்டிருப்பான்" என்றுள் மரிலோனு.

* * *

வருடப்பிறப்புப் பூசைக்கு யாவரும் தேவாலயம் சென்றனர். யக்கரிசேயு தனது தந்தையைத் திரும்பவும்காணச்செய்து, தான்விரும்பிய மணாளியைப் பெறுவதற்கு அருள்செய்த திவ்விய பாலனுக்கு நன்றி கூறிக்கொண்டிருந்தான். இசபெல்லோனு தான் விரும்பிய மணாளனை அடைய அருள்செய்ததற்கும், குடிகாரனாகிய யக்கோமேயு விடம் இருந்து தன்னைத்தப்பச்செய்ததற்குமாகப் பாலகயேசுவுக்குப் பணிவுடன் துதி செலுத்திக் கொண்டிருந்தாள். தன்மகள் விவேகத்துடன் தக்கமணாளனைத் தெரிந்துகொள்ள அருள்செய்த தேவபாலனுக்குத் தோத்திரம் சொல்லிக் கொண்டிருந்தார் மக்காரியு. தனது மன்றாட்டைக்கேட்டு அற்புதமாக மனவினைநடக்க அருள்செய்த அன்னை மரிபாலகனை அஞ்சலித்துக் கொண்டிருந்தாள் மரிலோனு. ஆனால், அவள் மனத்தில் அந்தமனிதர்—50 ஈபுர் வாங்கிய அந்தமனிதர் யார்? என்று அடிக்கடி கேள்வி பிறந்து கொண்டிருந்தது. மோசேயு தனக்கு முன்னிருந்த ஆசனங்களில் அமர்ந்திருக்கும் தனது மகனையும், மருமகளையும், அவர்கள் குடும்பத்தாரையும் கண்குளிரப்பார்த்து, மாடாடுறை குடிலில் வந்துதித்த மாமரிபாலனுக்கு மங்களம் கூறிக்கொண்டிருந்தார். இவர்கள் ஒவ்வொருவர் மனதிலும் உண்டாயிருந்த சிந்தனைகள் பாஞ்சோதியாகிய திவ்வியபாலக யேசுவுக்கன்றித் தேவாலயத்தில் இருந்த மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்? சுபம்!

(கதையில்வந்துள்ள பெயர்கள் யாவும் கற்பனை. அவைகள் எவரையும் குறிப்பிடுவன அல்ல.)

—பிரித்தானியஅரசின் பிரதமரான திரு. வின்ஸ்றன்சேர்ச்சில் அவர்கள் சென்ற 20-ந்திகதி வெள்ளிக்கிழமை தமது 77-வது பிறந்தபெருநாளைக் கொண்டாடினர். தமது 84-ம்வயதிலே பிரித்தானியஅரசின் பிரதமராய்விளங்கியிருந்த வில்லியம்கிளாட்ஸ்ரன் அவர்களுக்குப்பின் பிரித்தானியின் அதி

ஆகமனத்திற்குப் பக்குவம்...

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

லட்சணமான அசுசிநிறைந்த மிருகசீவியத்தைத் தமதுஅளவறுக்கப்படாத பரிசுத்ததனத்தினால் சொஸ்தமாக்கினர்.

குருவாகவந்தார். ஆதிபரனின் வேதமுறையைப் போதித்தார். யாவரும் தேவபிதாவின் புத்திரர். ஆகவே, எல்லாரும் சகோதரர்என்பதை நிலைநாட்டினர். என்றுமுலகமுறையிலே எல்லாரும் சரிசமானமானவர்கள் அல்ல என்பதைக் காட்டத்தேவனுகியஅவர், மனிதனுகிய சேசாரின் கட்டளைக்கு அமைந்து மரித்தார். "வழியும், சத்தியமும், சீவியமும்" ஆனவர் அவர்ஒருவரே.

தொண்டனுகவந்தார். தொழிலாளிகளின் மங்காத கிரீடம் அவரே. ஐயையோ! தொழிலாளிகளான சகோதரர்களே! ஆட்டுத்தோலைப் போர்த்த ஓனாய்கள் உளறும் தப்பறையான போதகங்களினால் ஏன் நீங்கள் ஏமாந்துபோகின்றீர்கள்? என்னே பரிதாபம்! நத்தார்ச் சுபதினம் நன்மனமுடைய மாந்தர்யாவருக்குமுரிய ஒருஅருந்தினம். ஆனால் வறிஞருக்கும், தொழிலாளர்கட்கும் விசேஷவிதமாக உரியஓர் தினம். மூப்பது ஆண்டுகளாக எம்பெருமான் வறிய தொழிலாளனுகவன்றோ உழைத்தார்? அண்டசராசரங்களையும் படைத்த அவர்திருக்கரமானது தாம்படைத்த மனிதனிடம் கைநீட்டிக் கூலிபெற்றது. இதை நினைக்கும்பொழுது தேகம் புல்லரிக்கின்றதே. உள்ளம் நடுங்குகின்றதே. "வருந்திச் சுமைசுமக்கிறவர்களே! நம்மண்டை வாருங்கள். நாம் உங்களைத் தேற்றுவோம்." வறியவர்களே, துன்பப்படுகிறவர்களே, திகைக்கிறவர்களே நம்மிடம் வாருங்கள். நம்பிக்கையுடன் வாருங்கள் என்று அன்புடன் அழைக்கும் தெய்வம் இருக்க, ஐயையோ! சகோதரர்களே, "வெட்டுங்கள், சுடுங்கள், கொலை செய்யுங்கள், தீக்கிரையாக்குங்கள், நரர்தலத்தைப் பரிநாசமாக்குங்கள்"என்று குளறி ஓலமிட்டு உருக்கொண்டாடும் அலகைக்குழாமின்பின் ஏன்? ஏன்? ஏன்? செல்லுகின்றீர்கள்?

அன்பராகவந்தார். இரட்சகராக வந்தார். இவைகளை எடுத்துவிரிக்கக் காவலன் இடந்தரானென விசனிக்கிறேன். ஆதலால் — கிறீஸ்துவ சகோதரர்களே! உலகம், சரீரம், பிசாசு இடும் மாயமருந்தாகிய நஞ்சை உண்டதன்பயனுக எங்கள்திவ்வியகுழந்தையை உலகம் வேண்டாமென்கிறது. பத்துக்கற்பனையும், திருச்சிலுவையும் இல்லாவிடில், அவரை உலகம் தாராளமாகஏற்றுக்கொள்ளும். உலகம் அவரைத்தள்ளிவிடுவது மாத்திரமல்ல, ஆனல், இடதுபாரிசக்கள்வனைப்போல, அகோரவேதனைகளின் மத்தியிலும் அவரை அதுபகைத்துத் தூஷணிக்கின்றது. என்னே மயக்கம்! என்னே அகங்காரம்!

ஆகவே, அவருடையஅடியார்களாகிய நாமாவது, திவ்விய பாலகயேசுவை அன்புடன்வாரி எடுத்து, எங்கள்இருதயகமலங்களில் வீற்றிருக்கச் செய்வோமாக. பெத்லகேமை மனதில் இருத்திச் சிந்திப்போர் தேடக்கிடைக்காத பல்லாயிரம் மோட்சதிரவியங்களை அங்கே கண்டடைவார்கள். அது ஓர் ஞானமிர்த தடாகம். நாம் சுட்டுவன அதிற்சிலதிவலைகள் மாத்திரமே. உலகம் உங்களுக்கு அளிக்கஇயலாத சுத்தபேரின்பத்தை— ஆத்மசமாதானத்தை நீங்கள் விரும்புகின்றீர்களா? அப்படியாயின் உலகமாய்கைகளில்நின்று உங்களைப் பிரித்துக்கொள்ளுங்கள். பரிபூரணமாகத் திவ்விய பாலகனுடன் இணைந்துகொள்ளுங்கள். நித்தியசீவியம் வேண்டுமா? அநித்திய சீவியத்தின் பந்தனங்களை அறுத்துவிடுங்கள். உங்கள் இருதயங்களைத் தேவபாலன் பள்ளிகொள்ளும் புல்அணையாக்குங்கள். உங்கள் இல்லங்களை அவர் பிறக்கும் குகையாக்குங்கள். எக்காலும் அவரை அங்கு வீற்றிருக்கச் செய்யுங்கள். அவரிலே நீங்கள் மாறிப் பிறக்கவேண்டும். அதன்பயனுக உங்களுக்கு உரியவைகள் அன்பு, அமைதி, ஆன்மசமாதானம், நித்திய ஆனந்தம். சுபம்!

நத்தார்ப் பரிசில்கள்

நத்தார்மகோற்சவத்தை முன்னிட்டுச் சேர் சித்தம்பலம் காடினர் அவர்களும், அவர்பாரியாரும் சென்ற 18-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் அச்சுவேலிமக்களைச் சந்தித்தார்கள். பாடசாலைச்சிறார்கள் பூமாலைகள்சூட்டி அர்ச். தெரேசா பாடசாலையில் அவர்களைவரவேற்றனர். பின்னர் தாங்கள் சித்தஞ்செய்துகொண்டுவந்த நூற்றுக் கணக்கான விலைபெற்ற வெகுமதிகளைக் காடினர்தம்பதிகள் பிள்ளைகளுக்கு உபகரித்தார்கள். அச்சுவேலி மக்களிலே இவர்கள் கொண்டிருக்கும் அன்பு பாராட்டத்தக்கது. இத்தகைய உபகாரங்களை வருடந்தோறும் அச்சுவேலியில் தமதுமக்களுக்குச் சேர்சிற்றம்பலம்காடினர் செய்துகொண்டு வருகிறார்என அறிந்து மகிழுகிறோம்.

விருத்தாப்பியமந்திரியாராய் இவர்தற்போது விளங்குகின்றார்.

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ் சபை வருடாந்தஞானஒடுக்கம் இம்மாதம் 30-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அர்ச். சூசையப்பர்கூட்டச்சாலையில் நடந்தேறும். காலை 9 மணிக்கு ஆரம்பமாகிப் பொதுக்கூட்டத்தினபின் சற்பிரசாதஆசீர்வாதத்துடன் மாலை 5 மணிக்கு முடிவாகும். (மத்தியானப் போசனத்துக்கு லீவு கொடுபடும்.) அவ்வமயம் மூன்றுசகோதார்கள் வாக்குத்தத்தம் எடுப்பார்கள். 1952-ம்வருஷம் தைமாதம் பரிபூரணபலன்கள் அடையக்கூடியநாட்கள்:—1, 2, 4, 6, 16, 19, 28, 30, 31. பொதுப்பாவமன்னிப்பு 1-ம், 6-ந்திகதிகளில் அடையலாம்.

A. S. FRANCIS OF MARY
for Director

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியுமா?

1. கடைசியாக அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளப்பெற்ற பாப்பான வர் யார்?

அர்ச். ஐந்தாம் பத்திநாதர். இவர் 1712-ம் ஆண்டு அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளப்பெற்றார்.

2. யேசு சபை எப்போது எங்கே அடியிடப்பட்டது?

பரீஸ் நகரிலே மொண்மாத்தர் ஆலயத்தில் 1534-ம்ஆண்டு அடியிடப்பட்டது.

3. ஸ்பெயினிலே கிறீஸ்து வேதம் முதன் முதலாக எப்போது போதிக்கப்பட்டது?

அதனே ரோமர்கள் ஆட்சிசெய்த காலத்திலே முதன் முதலாக அங்கு கிறீஸ்து வேதம் போதிக்கப்பட்டது. புராதன பாரம்பரியம் கூறுகிறபடி, அர்ச். சின்னப்பரும், யாகப்பரும் என்ற இரு அப்போஸ்தலர்களும் அங்கு சுவிசேஷம் போதித்து ஸ்பானியர்களே மனந்திருப்பிக் கிறீஸ்து வேதத்தில் சேர்த்தார்கள்.

4. "நுன்சியோக்கள்" என்று அழைக்கப்படுகிறவர்கள் யார்?

வத்திக்கானுக்கும், அதனோடு உறவு பூணும் நாடுகளின் அரசாங்கங்களுக்குமிடையே இராசியஉறவை வளர்ப்பதற்கென்று அந்தந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற பாப்பரசரின் ஸ்தானீகர்களே "நுன்சியோக்கள்" என அழைக்கப்படுகின்றனர்.

5. றோமை நகரின் ஏழு குன்றுகளையும், நித்திய நகரையும் பற்றியாது அறிவீர்கள்?

றோமை மாநகரின் ஏழு குன்றுகளும் 80 முதல் 120 அடிஉயரமுள்ள மேடுகளாகும். இவற்றின் மீதுதான் கி. மு. 753 முதல் 510 வரையிலுள்ள ஆண்டுகளிலே நித்தியநகர் கட்டியெழுப்பப் படலாயிற்று.

6. உலகில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் என்னவீதம் இருக்கின்றார்கள்?

ஒவ்வோர் பத்துப்பேருக்கு நான்கு பேர்வீதம் எழுதப்படிக்கத்தெரிந்தவர்களாய் இருக்கிறார்களென்று ஐக்கிய நாடுகளின் கல்வி-விஞ்ஞான-கலாசார ஸ்தாபனம் கூறுகின்றது.

7. "அப்போஸ்தோலிக்க பிதாக்கள்" என்னப்படுகிறவர்கள் யார்?

அப்போஸ்தலர்களின் காலத்திலே முதலாம் நூற்றாண்டில் பிறந்த அர்ச். பொலிக்காப்பு, அர்ச். கிளெமென்ற், அர்ச் இக்னேஷஸ் போன்ற கிறீஸ்துவ எழுத்தாளர்களே.

8. அங்கிலிக்கன் சபைக் குநப்பட்டங்கள் செல்லமாட்டாவென்று எப்போது பிரகடனஞ் செய்யப்பட்டது?

பதின்மூன்றாம் சிங்கராய பாப்பான வர் விடுத்த "அப்போஸ்தொலிச்சே கூரே" எனும் ஆஞ்ஞாபத்திரமூலம் பிரகடனஞ்செய்யப்பட்டது.

9. டிசம்பர் (மார்கழி) என்பதன் அர்த்தம் என்ன?

பத்தாவதுமாதம் என்பதே. ஆனால், இன்று அது பன்னிரண்டாம்மாதமாக வழக்கிலிருக்கிறது. இதற்குக்காரணம் றோமைச்சக்கிரவர்த்தி ஒருவர் ஜூலியசீசரின் ஞாபகமாக ஜூலை மாதத்தையும், அகுஸ்துஸ்சீசரின் ஞாபகமாக ஆகஸ்ற் மாதத்தையும் ஏற்படுத்தி இடையிற் கொண்டு வந்து புகுத்தியமையே.

10. ஆஸ்பத்திரிகளின் பாதுகாவலரான அர்ச்சியசிஷ்டர் யார்?

அர்ச். தேவ அருளப்பர்.

11. சந்தா மரிய மஜோறே ஆலயத்தைப்பற்றி என்ன அறிவீர்கள்?

இது றோமாபுரியிலுள்ள நான்கு மகாலயங்களில் ஒன்றாகும். சந்தா மரிய மஜோறே என்பதன அர்த்தம் அர்ச். தேவமாதாவின் மகாலயம் என்பது. காங்கையான ஓர் கடுங்கோடையிலே தேவதாயார் அற்புதமாகப் பனிவிழச்செய்து தம்முடைய பக்தரான உபகாரி ஒருவருக்கு அடையாளங் காண்பித்த இடத்திலேயே இந்த ஆலயம் கட்டியெழுப்பப்படலாயிற்று.

12. ஒரு அவுன்ஸ் தங்கத்தை அதிகம் மெல்லிய தகடாக அடித்தால் அது கொண்டு எத்தனை எக்கர் நிலத்தை முடலாம்?

ஒரு எக்கர் நிலத்தை மூடலாமென்று நிபுணர்கள் கூறுகின்றார்கள். வியாபார சம்பந்தமான தங்கத்தகடு ஒரு அங்குலத்தின் இரண்டு லட்சத்தில் ஒருபங்கு தடிப்புடையதாகும்.

மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஓர்சந்தோஷ சமாச்சாரம். அதாவது கடந்தசில வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் பருவமழை அதிகமாகப்பெய்தமையாலே உழவர் மகிழ்ந்து உற்சாகமாக உழவுத்தொழிலைச் செய்திருப்பதாகும். நிற்க, சிலரின் வாயில்நின்று புறப்படும் சிலேடையான செருக்குமொழிகளாலே நாடு சின்னபின்னப்பட்டுச் சீரழிந்துபோகின்றது, அன்றியும் சிலபொதுத்தலங்களில் முகத்தாட்சணியம், பாரபட்சம் தலைவிரித்தாடுவதாலே அமைதியான வாழ்க்கை குறைவுபட ஏதுவாகின்றது.

கோரக்கோலை

காத்தாங்குளக் கிராமத்திலே சமீபத்தில் ஓர்நாள்இரவு 9 மணியளவில் கொல்வேலைசெய்யும் மணிஆசாரி என்பவன் தனதமனைவியைக் கத்தியால் வெட்டியபோது, அதைக்கண்ணுற்ற அவன்பிள்ளைகள் பலமாகக்கூச்சலிடவே, சனங்கள்திரளாகச்சென்று கூடிவிட்டனராம். அப்போதுஅவன் குற்றுயிராய்க்கிடந்த அவளைக்காலில் பிடித்திழுத்துத் தெருஓரம் கொண்டுசென்று மீண்டும்பலமுறை கத்தியால் வெட்டிக்கொன்றபின் தனதுவீட்டுக் கூரைக் கிடுகுகளைப்பிடுங்கிப் பிரேதத்தின்மேல்போட்டு மண்ணெண்ணெய் ஊற்றித் தீமூட்டிவிட்டுத் தனதுஇரு பிள்ளைகளையும் அருகே இருத்திக்கொண்டு யாதொருபீதியுமின்றி உல்லாசமாகப் புத்தகம் வாசித்துக்கொண்டிருக்கும்வேளை மாத்தைக்காரியாதிகாரியால் கைதுசெய்யப்பட்டானென்று சொல்லப்படுகிறது.

மாந்தையில் திருநாள்

பண்டைக்காலமுதல் சத்தியவேத மணங்கமழும் மாந்தைப்பதியின் அழகிய லூர்துகெபியில் சென்ற 8-ந்திகதி தேவதாயார் மாசில்லாமல் உற்பவித்த திருநாள் கொண்டாடப்படலாயிற்று. அயற்கிராம வாசிகளும், பல்வேறு பாடசாலைகளைச்சேர்ந்த பிள்ளைகளும் சமூகமாயிருந்தார்கள். வண. எஸ். வேந்தர்கோன் சுவாமியவர்கள் பாடற்பூசைநிறைவேற்றித் தேவதாயாரின் அமலோற்பவத்தையும், லூர்துபதியில் மாதாகாட்சியளித்த வரலாற்றையும்பற்றிச் சிறந்ததோர் பிரசங்கஞ்செய்தனர். பின்னர் செபத்தாலும், திவ்வியகீதத்தாலும் மாதாவை வாழ்த்நிமன்றாடிப் பக்தர்குழாம் வழிகொண்டது.

நாவற்குளம்

மன்னர்ப்பட்டினத்திற்கு அண்மையில், மாதோட்டத்தின் முன்னணியில் மன்னார் - பூநகரித் தெருவுக்கும், மன்னார் - மதவாச்சித் தெருவுக்கு மிடையே பரந்துகாட்சியளிக்கும் பெரியகிராமமே நாவற்குளம், இஃது பெரியநாவற்குளம், நாகத்தாழ்வு, சிறுநாவற்குளம்எனச் சிறியமூப்பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றில் ஒவ்வொன்றும் தனித்தனிகுளங்களைக் கொண்டனவாயினும் நன்செய் தரைப்பரப்பில் சம்பந்தப்பட்டன போலவே காணப்படுகின்றன. இலங்கையின் பூர்வீகக்குடிகளாகிய இயக்கர் தென்பகுதியிலும், நாகர் வடபகுதியிலும் வசித்தனர்என்பது இதிகாசர் கூற்று. இதைஆதாரமாகக்கொண்டு ஆராயுமிடத்து நாகர் இங்குள்ள குளக்கரைகளிலும், தாழ்வானபகுதியிலும் முதன்முதலாகக் குடியேறியமையால் நாகர்குளம், நாகத்தாழ்வு என வழங்கியிருக்கலாம். பின்னர் இந்த நாகர்குளம்என்பது காலகதியில் சிதைந்தும், திரிந்தும் நாவற்குளம் என மாறியிருக்கலாம். குளங்களிலும் பெரிது, சிறிது, தாழ்வுமுதலிய விகற்பங்கள்நோக்கிப், பெரியநாவற்குளம், சிறுநாவற்குளம், நாகத்தாழ்வுஎன வழங்கப்பட்டனஎன்று கூறினும் பொருந்தும். பெரியநாவற்குளத்தை இப்பகுதியிலுள்ள ஏனையகிராமங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது நாகரீகம், மரியாதையான உடைநடைபாவனை ஆதியனவற்றில் இதுமேம்பட்டிருக்கிறது. இன்னும்ஆராயுமிடத்து பெரிய வம்சவழித்தோன்றல்கள்பலரின் ஜனனபதியாகவும் வசிப்பிடமாகவும் ஓர்காலம் விளங்கியிருக்கிறது. மாதா பக்திமிக்க மாந்தைக்கு அயலில் இருப்பதால் இதுவும் மாதாபக்தியில் சிறந்திருக்கவேண்டுமென்பது புலனாகிறது. இங்கு இப்போதும்காணப்படுகின்ற பெரிய மரியமாதாகோயிலே இதற்கு நற்சான்று. இது பறப்பாங்கண்டலிலுள்ள கூட்டத்துமாதாகோயிலின்காலத்ததாகும். இங்கே ஓர் நன்னிலையிலுள்ள கத்தோலிக்கபாடசாலையும் இருக்கிறது. இதுவே இங்குள்ள எல்லாப்பாடசாலைகளிலும் முற்பட்டதெனக்கூறலாம். இத்தகைய ஓர்கிராமம் இன்று சனத்தொகையில் குன்றி வளங்கள்சில குறைவுபட்டு வரக்காண்பது வருத்தத்தக்கதே.

சோபனமும் வந்தனமும்

சுமார் பதினைந்துவருடகாலமாக நாட்டின்நல்முன்னேற்றம் கருதியும், சத்தியவேத சம்பந்தமாகச் சில உண்மைவரலாறுகள்பற்றியும் எழுதிய கடிதங்கள், கட்டுரைகளை வரவேற்று வெளியிட்டுவந்த "காவலன்" ஆசிரியருக்கும், அவைகளை ஆர்வத்துடன் படித்தவாசகர்களுக்கும் நாட்டுத்தூதன் நத்தார்ச்சோபனமும், புதுவருட வந்தனமும் கூறுகின்றன.

சுபம்.

பெற்றோர் தினவிழா

உயிலங்குள விசாரணைப்பங்கைச் சேர்ந்த பாலைப்பெருமாள்கட்டுக் கத்தோலிக்கபாடசாலையில் முதன்முறையாகப் பெற்றோர்தினவிழா கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலைகட்டளைக்குருவர் வண. F. றெஞ்சுசுவாமியார் விழாவைமுன்னிட்டுத் திவ்விய பூசைப்பலிஒப்புக்கொடுத்தார். பின்னர் 8-30 மணியளவில் நூற்றுக்கதிகமான மக்கள் கூடியசமூகத்தில் கட்டளைக்குரவரும், முருங்கன் கிறீஸ்துஇராசாதாபனதலைவர் வண. S. S. வில்லவராயசிங்கசுவாமியவர்களும் மாணவிகள் இருவரால் மாலைஇட்டு வரவேற்கப்பட்டு, முன்னையவர் தலைமைதாங்க, பாலியரால் வந்தனப்பாடிக்கப்படலாயிற்று.

அதன்மேல் பாடசாலை ஆசிரியர் P. இராயப்புஅவர்கள் பாடசாலைஅறிக்கையை வாசித்தனர். அதில் பாடசாலையின் விசேஷவளர்ச்சி குறிப்பிடத்தக்கது. 18 மாணவரைக் கொண்டிருந்த பாடசாலை ஒருவருடத்துள் 30 மாணவரைக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கதாய் இருந்தது. பின்பு பெற்றோரின்சார்பாகச் சக்கிறிஸ்தாம் திரு. A. சந்தியோகுஎன்பவர் கத்தோலிக்கபாடசாலைகளிலே எவர்க்குமுள்ள நம்பிக்கையைத்தெரிவித்து, பாடசாலையின் தீவிரமுன்னேற்றத்தையும், அதற்குக்காரணரான பாடசாலை ஆசிரியரின் அயராஉழைப்பையும் வியந்துகொண்டார். முருங்கன்தாபனதலைவர் சுவாமியார்எழுந்து பாடசாலைஅமைக்கப்பெற்ற ஒருவருடகாலத்துள் அது பலவிதமுன்னேற்றங்கள் அடைந்திருப்பதையும், அதற்குக்காரணமாகப் பெற்றோர்பாட்சாலைமட்டிலும், ஆசிரியர் மட்டிலும் கொண்டுள்ள மேலானநம்பிக்கையையும், அவர்களின்ஒத்துழைப்பையும் பாராட்டி, இப்பாடசாலை மேன்மேலும்சிறந்து மிளிரவேண்டுமெனவிரும்பி ஆசிஈந்துநின்றனர்.

ஈற்றில் தலைவர்சுவாமியார்எழுந்து தமதுவிசாரணைப்பங்கின் சிறியபாடசாலை இதுவாயினும் அதில் பெரியவிழா ஒன்றைக் காணும்பாக்கியத்தைப்பெற்றமை தமக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தருவதாயும், இதற்கெல்லாம் காரணரான ஆசிரியரின் சிறந்ததொண்டையும், பெற்றோர்மட்டிலும், பிள்ளைகள்மட்டிலும் அவர் கொண்டுள்ள அன்பையும் பாராட்டித் தாமும்பாடசாலையின் எவ்விதமுன்னேற்றத்திலும் உதவியளிப்பதாயும் கூறிநின்றார். அதன்மேல் மாணவர்களால் ஆங்கிலத்திலும், தமிழிலும் மிகநேர்த்தியாக நடைபெற்ற பேச்சுகள், பாட்டுகள், கமிக்குகள், நடனங்கள், பைலாடான்ஸ்என்பனவற்றுடன் 'தாத்தா'என்றநடிப்பும் நடித்துக்காட்டப்பட்டது. கடைசியாக ஆசிரியர் யாவர்க்கும் நன்றித்தெரிவித்ததும் புகைப்படம் பிடிக்கப்பட்டுத் தேநீர் விருந்துடன் விழா இனிதே முடிவெய்தியது.

நாலைசங்கதிகள்

—எலிசபேத் இளவரசியும், அவர் நாயகரான எடின்பறோகோமகனரும் வருகிறதைமாதம் 31-ந்திகதி லண்டனிலிருந்து ஆகாயவிமானத்திலே கினியாநாட்டுக்குவந்து கிழக்குஆபிரிக்காவில் ஒருவாரம்தங்கியபின் மாசிமாதம் 7-ந்திகதி மொம்பசாவிலிருந்து கோதிக்எனும் கப்பலில் கினியாஎன்ற குறுயிசரைவழித்துணையாகக்கொண்டு கொழும்பைநோக்கிப் புறப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

— பிரித்தானியிலே சனங்கள் தங்களுக்குச் சொந்தமாய்ப் பிரத்தியேகமாக வைத்திருக்கின்ற சிறுகப்பல்களெல்லாம் கடற்படைக் காரியாலயத்தாலே பதிவுசெய்யப்படவிருக்கின்றன. இவைகள் சென்றமகாயுத்தத்திலே 1940-ம் ஆண்டு டன்கேர்க்கில் வீரத்துவ பணியாற்றின. யுத்தகாலத்திலே இவைகள் களவுசாமான்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்களைப் பரிசோதிக்க உதவப்படும்.

— சீனக்கம்யூனிஸ்தர்கள் மேலும் மூன்று பிறதேசமிஷனரிய மேற்றிராணிமார்களைக் கைதுசெய்து சிறைவைத்திருக்கிறார்கள். இவர்களுடன் எல்லாமாக அங்கே தற்போது இருபது பிறதேச மேற்றிராணிமார் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஓர் ஜேர்மனியரான ஐறேமேற்றிராணியாரும், சியல், பசினிஎனும் இத்தாலியமேற்றிராணிமாருமே முந்திய மூவருமாவர்.

— பரிசுத்தபாப்பரசர் அடுத்த சர்வதேச சற்பிரசாதமகாநாடு நடைபெறுமிடமாகப் பார்சலோனாநகரைத் தெரிந்துகொண்டதன் ஞாபகார்த்தமாக அந்நகரிலே புதியசதுக்கம்ஒன்றுக்குப் பன்னிரண்டாம் பத்திநாதர் சதுக்கமெனப் பெயரிடப்படவிருக்கிறது. இது அங்கே விக்ரோறியா—ஜெனறல் பிறங்கோ வாயில்வீதிகளுக்கு இடையிலுள்ளது.

—உலகில் மகாசெல்வமிகுந்த பங்தையக்குதிரை ரன்னியேம்எனப்பெயரிய நான்குவயதுள்ள பேரானபிராஞ்சிய பந்தையக்குதிரையேயாகும். இது வெற்றிபெற்றுள்ள பந்தையஓட்டங்களாலே இன்றுஐரோப்பாவில் மகாப்பெரிய பந்தையக்குதிரையாயும், அவற்றிலே 83,308 பவுண் வெற்றிபெற்று உலகில் மகாசெல்வமிகுந்த பந்தையக்குதிரையாயும், விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பக்கம்

அண்ணு சொல்வது

—*—

அன்பார்ந்த சகோதரங்களே!

இன்னும் நான்கு நாட்களுக்குப் பின் நத்தால் திருவிழா. அதற்கு எப்படி ஆயத்தப் படுத்த வேணும் என்று சென்ற வாரம் சொல்லியிருந்தேன். அதன்படி எல்லாரும் நன்றாய் ஆயத்தப் படுத்துகிறீர்களா?

இந்தத் திருநாளில் பாலக யேசுவிடம் என்னத்தைக் கேட்கப் போகிறீர்கள்? அவருடைய நேசம் பொருந்திய இராச்சியம் உங்கள் இருதயத்தில் உறுதி கொள்ள வேணும் என்று கேட்பீர்கள். உங்கள் அம்மா, அப்பா, சகோதரரிலும் நிலைகொள்ள வேணும் என்று கேளுங்கள்.

மங்கலமான இத்திருநாளிலே என் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளுக்கு என் மனமார்ந்த நத்தால் சோபனம். இருதயம் நிறைந்த வரப்பிரசாதமும், கை, மடி நிறைந்த பலகாரம், பட்டாஸ் வெகுமதியும் கிடைக்க வேணும் என்று விரும்புகிறேன்.

இப் "பாலர் பக்கம்" உருப்பெற உதவிய அதிகாரிகள், அதிபர், அன்பர்கள், அச்சகத்தாருக்கும், விஷயதானம் செய்து வந்த, வருகிற, வரப்போகின்ற சகோதர, சகோதரிகட்கும் என் மனமார்ந்த நத்தால் சோபனம் கூறி, எல்லோர்க்கும் புது வருடத்தில் பாலக யேசுவின் பல மிகுந்த வரங்களையும் விரும்புகிறேன். சுபம்.

உங்கள் அன்புள்ள
அண்ணு.

மேற்றிராணி ஆண்டவரின் திருமுகம்

நமது அன்பார்ந்த பிள்ளைகளுக்குக் கர்த்தரில் சுபமும், ஆசீர்வாதமும் கூறுகிறோம்.

அருமையான பிள்ளைகளே! நத்தால் திருநாளை நினைக்கும் பொழுது உங்கள் அகமும் முகமும் மலரும். ஏன்? ஏனெனில், அது சந்தோஷம் நிறைந்த தினம். பாவத்தால் மோட்ச உரிமையை இழந்து போன மனிதனை இரட்சிப்போம் என்று சர்வேசுரன் கொடுத்த வாக்கை நிறைவேற்றிய தினம். பாவ இருள் மண்டிப்போய் இருந்த உலகத்தில் ஞான ஒளி உதித்த தினம். தேவ ஏற்பாட்டைக் குழப்பி விட்டேன் என்று வீம்பு பாராட்டிக் கொண்டிருந்த நரகக்கூழியை வென்று தோற்கடிக்க நரதேவனை யேசு வீரர் பிறந்த தினம்.

மேலும், நத்தால் தினம், பாவத்தால் உண்டான பழியைத் தீர்த்துத் தேவனுடன் மனிதனை உறவு படுத்தும் ஏகமத்தியஸ்தரான யேசுநாதர் பிறந்த தினம். ஆகையால்தான் சம்மனசுகள் திருஇரட்சகர் பிறந்த பொழுது "உன்னதத்தில் சர்வேசுரனுக்கு மகிமையும், பூமியில் நன்மனமுள்ள மனிதருக்குச் சமாதானமும்" என்று சுபமங்களம் பாடினார்கள்.

சர்வேசுரனுடன் நீங்கள் சமாதானமாய் இருப்பது மாத்திரம் அல்ல நம் அயலவருடனும், எல்லா மனிதருடனும் சமாதானமாய் இருக்க வேண்டும்.

நத்தால்தினம், தேவன் தம்மை எங்களுக்குத் தந்ததினம். பாருங்கள் இந்த ஆச்சரியத்தை! தேவன் எமது மனித சுவாபத்தை எடுத்துக் கொள்ளுகிறார். என்னத்துக்காக? தமது தேவ சுவாபத்தை எங்களுக்குத் தரும் படியாக. எவ்வளவு மேலான கொடை என்று பாருங்கள். நீங்களும் அப்படிச் செய்யக்கூடாதா? சர்வேசுரன் தம்மைமறந்து, தியாகம் பண்ணி, தம்மை எங்களுக்குக் கொடுத்தாரே. நீங்களும் அப்படி உங்களை ஒறுத்து, சுயநேசம் இல்லாமல் அயலாரில் பற்றுதல் வைத்து, உங்களைத் தியாகம் பண்ணிப் பிறருக்கு நன்மை செய்யுங்கள். யேசுநாதர் சொன்னது என்ன? "வாங்கிக்கொள்வதிலும் பார்க்க, கொடுப்பதே மேலான பாக்கியம்" என்றார்.

ஆகையால் பிள்ளைகளே! நீங்கள் யேசுநாதரைப் பின்பற்றி, உங்கள் இலாபத்தைத் தேடாமல், உங்களை மறந்து, பிறருக்கு நன்மை உபகாரம் செய்யுங்கள். உங்கள் சுற்றத்திலே, ஊரிலே இந்த நத்தால் தினத்தைச் சந்தோஷமாகக் கழிக்க முடியாமல் சிலர் இருக்கக்கூடும். அவர்களுக்கு உங்களால் இயன்ற சந்தோஷத்தை உண்டு பண்ணத் தெண்டியுங்கள். அப்பொழுது திவ்வியபாலன் உங்களைத் தம்முடைய சந்தோஷத்தால் நிரப்புவார்.

இவ்வரங்களுக்கு அச்சாரமாக நாம்உங்களை ஆசீர்வதிக்கிறோம்.

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை,
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

விடுவிடைகள்

1. வேதத்திலெல்லாம் நான்கு இலட்சணங்களும் சிறப்பாக ஒருங்கே அமைந்த வேதம் என்ன வேதம்?
   ரோமன்கத்தோலிக்க சத்தியவேதம்
2. இரகசியத்திலெல்லாம் இரகசியம் என்ன இரகசியம்?
   தமதிரித்துவத்தின் பரமஇரகசியம்.
3. விசேஷத்திலெல்லாம் விசேஷம் என்ன விசேஷம்?
   யேசு பிறந்த சுவிசேஷம்.
4. நாமத்திலெல்லாம் நாமம் என்ன நாமம்?
   யேசு என்னும் திருநாமம்.
5. கருணையிலெல்லாம் கருணை என்ன கருணை?
   சற்பிரசாதமென்னும் திவ்விய நற்கருணை.
6. வெள்ளியிலெல்லாம் வெள்ளி என்ன வெள்ளி?
   யேசு மரித்த நாளாகிய பெரிய வெள்ளி.

பாலன்

1
புல்லு மெத்தையிலே — மலர்ச் செடி
போலும் பாலகனே!
நல்ல நித்திரையாய்க் — கிடப் பதன்
ஞாயம் என்ன ஐயா?

2
பஞ்சு மெத்தையிலே — தக் காளிப்
பழத்தைப் போல் நீரும்
துஞ்சல் ஆகாதோ — உமது
துயரும் நீங்காதோ?

3
மாட்டுத் தொட்டிலொன்றே — பர லோக
மைந்தனின் மாளிகைகள்?
கூட்டம் மந்தைகள்தான் — விளை
யாடிக்
கொஞ்சும் பாவைகளோ?

4
கோட்டை கொத்தளங்கள் — வெடி
கொளுத்திக் கொண்டிருக்க
ஈட்டி வேந்தரிடம் — குழந்தாய்
ஏன் பிறக்கவில்லை?

5
வாடை பனிகுளிரோ — உம்மை
வந்து வணங்குபவர்?
கோடை மழைபோல — சுகத்
தைக்
கொடுக்கும் பாலகனே!

6
மாமரி பெற்றெடுத்த — மாசிலா
மாணிக்கம் போன்றவனே!
சாமத்திலே பிறந்தாய் — உலகச்
சந்தை அமைதியிலே.

— அழது

7. பாடுகளிலெல்லாம்பாடு என்னபாடு?
   யேசு சிலுவையில்பட்ட திருப்பாடு.
8. மலையிலெல்லாம் மலை என்ன மலை?
   கல்வாரி என்னுந் திருமலை.
9. மாதாவிலெல்லாம் மாதா என்ன மாதா?
   கன்னிமரியாள் என்னுந் தேவமாதா.
10. மாலையிலெல்லாம் மாலை என்ன மாலை?
    "ரோசரி" என்னும் திருச் செப மாலை.
11. அரசரிலெல்லாம் அரசர் என்ன அரசர்?
    திருச்சபைத் தலைவரான பாப்பரசர்.

செ. அலோசியஸ்
காரைநகர்.

அதிஷ்டமற்ற ஆனந்தன்

தன்னைப்போன்ற அதிஷ்டம் அற்றவர்கள் ஒருவரும் இல்லை என்று ஆனந்தன் நினைத்தான். ஏனெனில், அவனிடம் இருந்த ஒரே கண்ணாடி மாயிலும், வாய்க்காலுள் விழுந்து மறைந்து விட்டது. அன்றியும் அவனிடம் நல்லஉடைகளும் இல்லை. நல்ல உணவும் அவனுக்குக் கிடைப்பதும் இல்லை. தெருவழியே போகும் போதெல்லாம் தன்னைப்போன்ற பிள்ளைகள் தங்கள் அழகான வீடுகளில் சாப்பிட்டுக் கொண்டு இருப்பதைக் காண்பான். அந்நேரத்தில் தன் அரைவயிற்றுக் கஞ்சியை எண்ணி வருந்துவான். பாவைகள் விற்கப் படும் கடைக்கு அருகிலே போகும் போது அங்கே பொருட்கள் வாங்கும் பிள்ளைகளைப் பார்த்துப் பெருமூச்சு எறிவான். தன் சட்டைப் பைக்குள் இருக்கும் பத்துச்சதத்தைப் பலமுறை தடவிப் பார்ப்பான். அதைக் கொண்டு காய்ச்சலாய்க் கிடக்கும் தன் தங்கை மேரிக்கு ஏதாவது வாங்கலாம் எனக் கருதுவான். பத்துச் சதத்துக்கு என்ன வாங்க முடியும்?

ஆனால், அவனுடைய அதிஷ்டத்தில் மாறுதல் காணப் பட்டது. அன்று ஒருநாள் அவன் தெருவாலே போகும் போது ஒருபெண் அவனை அன்பாக அழைத்தாள். திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தான் ஆனந்தன். அந்தப் பெண் "தம்பி, உன் பெயர் என்ன?" "ஆனந்தன்" "நீ எங்கள்பரிசுத்த பாலர்சபையில்சேர்ந்து இருக்கிறாயா"? "ஆம்." "நத்தால் விருந்திற்கு நீ வர வேண்டும்" என்று அன்பாக அழைத்தாள். ஆனந்தன் தன் சகோதரியையும் அழைத்துப் போக நினைத்தான். ஆனால், அந்தப் பெண் ஆனந்தனை மாத்திரமே வரும்படி சொன்னாள்.

அடுத்த வாரம் ஆனந்தன் கொண்டாட்டத்திற்குச் சென்றான். அங்கே காணப்பட்ட பொருட்கள் எல்லாம் அவனுக்கு விநோதமாக இருந்தன. அவன் ஒருநாளும் சாப்பிட்டு அறியாத பலவித உணவுகள் அவனுக்குத் கொடுக்கப்பட்டன. சாப்பாடு முடிந்ததும் பிள்ளைகள் எல்லாரும் ஆனந்தமாகத் துள்ளிக் குதித்து விளையாடினார்கள்.

வெகுமதி கொடுக்கப் படும் நேரம் வந்ததும் எல்லாப் பிள்ளைகளும் தங்களுக்குத் தேவையான பொருட்களைத் தெரிந்து எடுத்தார்கள். அங்கு வைக்கப் பட்டிருந்த பொருட்களுள் ஆனந்தனுக்கு ஒரு சிறிய மோட்டர் காரில் தான்பிடித்தது. ஆனந்தனின்முறையும் வந்தது. அவனைத் தெருவில் சந்தித்த பெண்ணே உபகாரம்கொடுக்கும் இடத்தில் நின்றாள். ஆனந்தன் தனக்கு அந்த மோட்டர்காரைத் தரும்படியும், தன் தங்கைக்கும் ஒரு பாவை தரும் படியும் கேட்டான். ஆனால், அந்தப் பெண் ஆனந்தனிடம் ஒரு பாவையைக் கொடுத்து "தேவன் உன்னை ஆசீர்வதிப்பார்" என்று சொல்லி அனுப்பினாள். ஒரு பையன் பாவைப் பிள்ளை கொண்டு போவதைப் பார்த்து எல்லாப் பிள்ளைகளும் கேலி செய்தார்கள். இதிலும் ஆனந்தனுக்கு அதிஷ்டமாகப் போயிற்று. பாவையைப் பெற்ற மேரி ஆனந்தம் அடைந்தாள். "நீதான் என் அன்பான அண்ணு" என்று போற்றினாள்.

அன்று இரவு ஆனந்தன் தூங்கப் போகும் நேரத்தில் அவனைக் கொண்டாட்டத்திற்கு அழைத்துச் சென்ற பெண் வீட்டிற்கு வந்து ஆனந்தனின் சகோதர பாசத்தைப் புகழ்ந்து அவன் விரும்பிய அந்தச் சின்ன மோட்டர் காரைக் கொடுத்துச் சென்றாள். அந்த நாளிலிருந்து ஆனந்தன் தன்னை விட அதிஷ்டசாலிகள் இல்லை என்று எண்ணினான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் உங்கள் தேநீர், கோப்பி, கொக்கோ பானங்களுடன் நோணமார்க்பாலைக் கலந்து சாப்பிடுவதினிமித்தம், நீங்கள் உபயோகிக்கும் பால் உத்தரவாதமுள்ள சுத்தமும், முழுச்சத்தும், மற்றும் முதற்தரமான பசுப்பாலில் அடங்கியுள்ள எல்லாப்போஷாக்குச் சத்துகளும் அடங்கியுள்ளது என்பதாக உறுதிகொள்ளுங்கள்.

சம்பத்திரிசியார் கல்லூரி
கீழ்ப்பாடசாலை—1952.

மேற்படி கல்லூரியின் கீழ்ப்பாடசாலையில் 1952-ம் ஆண்டு 4-ம் வகுப்பிற் சேர இருக்கும் பிள்ளைகள் 1952-ம் ஆண்டு தைமாசம் 12-ந் திகதி சனிக்கிழமைகாலை 9 மணிக்கு நடக்க இருக்கும் பிரவேசப் பரீட்சைஎடுக்கவேண்டும்.

இப்பரீட்சைக்குத் தேவையான மாதிரிப் பத்திரம் கிழ்ப்பாடசாலையின் வண. தலைவர் சுவாமியிடம் பெற்றுக்கொள்ளலாம். இம்மாதிரிப் பத்திரத்தை முறையாக நிரப்பி மாணவனின் ஞானஸ்நானப் பத்திரத்துடனும் 3-ம் வகுப்பில் அரங்கேறிய பாடசாலை விடுகைப்பத்திரத்துடனும் தலைவர் சுவாமிக்கு 1952-ம் ஆண்டு தைமாசம் 7-ந் திகதி திங்கட்கிழமைக்குமுன் அனுப்பி வைக்கவேண்டும்.

13 பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் விண்ணப்பப்பத்திரங்களை ஏற்கனவே அனுப்பி இருக்கிறார்கள். அவர்களுள் சிலர் ஞானஸ்நானப்பத்திரமும், வேறு சிலர் பாடசாலை விடுகைப் பத்திரமும் இன்னும் அனுப்பிவைக்கவில்லை. அவர்களும் தைமாசம் 7-ந் திகதிக்குமுன் அனுப்ப வேண்டிய பத்திரங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

4-ம் வகுப்பில் சேர வரும் மாணவன் 1941-ம் ஆண்டு தை மாசத்துக்குப்பின் பிறந்தவனுயும் தமிழில் 3-ம் வகுப்பு அரங்கேறியவனுயும் இருக்கவேண்டும். பிரவேசப்பரீட்சைக்கு 2 ரூபா தை மாசம் 12-ம் திகதி காலை கட்டவேணும்.

கவனிப்பு: (1) 4-ம் 5-ம் வகுப்புப் பிள்ளைகளின் ஆங்கில உச்சரிப்பு, சம்பாஷணை முதலியவற்றைத் திருத்தமாய்ப் படிப்பிக்க ஆசிரியைகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(2) 4-ம் 5-ம் வகுப்புகள் கிழ்ப்பாடசாலையின் புதிய கட்டிடத்தில் நடத்தப்படும்.

(3) சம்பத்திரிசியார் கல்லூரியில் 4-ம் வகுப்புத் தொடக்கம் கல்லூரி முழுவதிலும் சிங்கள வகுப்புகள் நடப்பிக்கச் சிங்கள ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் இவ்விடம் குறிப்பிடத் தக்கது.

Mal. E. No. 514. Engels

பொதுசனசுகாதாரத்தின் ஒழுங்குமுறையான பாதுகாப்பு

பொதுசனசுகாதாரத்தைப் பாதிப்பதைத்தடுக்கும் முன்னவதான நடவடிக்கை எந்தவகையிலும் ஓர்வீணுசாரமல்ல. தொற்றுநோய்பரவுவதைத் தடுத்துவைக்குமாறு கப்பல்கள் அல்லதுஆட்களைச் சிலகாலம் தனிப்படவைப்பதாகிய "குவோறன்ரின்" என்பது 1403-ம் ஆண்டுவரையிலே வெனிஸ்நகரில் முதன்முதலாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அந்நாளிலே இதுபொருள் ஆளவில் 40 நாட்கள்கொண்ட ஓர்காலம்வரையில் தனிப்படவைத்தல்—ஏகாந்தமாகஇருக்கவிடுதல்என்ற கருத்தைக்கொண்டிருந்தது. இவ்வாறு தொற்றுநோய்கள் பரவுவது இயன்றவரையில் தடுக்கப்பட்டுவாலாயிற்று. காலகதியிலே ஏனையவியாபாரத் துறைமுகங்களும் வெனிஸ்நகர் காண்பித்த மாதிரியைக் கண்டுபாவித்தன.

ஆனல், இது பிரான்சிலே முதலாவது சர்வதேச ஆரோக்கியசாஸ்திர மகாநாடு 1851-மஆண்டு நடந்தேறுகிறவரை கண்டுபாவிக்கப்படவில்லை. பிந்த அதுபோலும் அநேக கூட்டங்கள் 1897-ம் ஆண்டுவரையில் நடைபெற்றன. பின்னர் பம்பாய்பகரில் பயங்கர அழிவுக்குரிய கொள்ளைநோய் உண்டாகவே, அதனல் தூண்டப்பெற்ற சர்வதேச பிரசித்திபெற்ற அதிகாரிகள் அதேவகையான கொள்ளைநோய்கள் பரவுவதைத் தடுத்துக் கட்டுப்படுத்துவற்கான வழிதுறைகளைக் கலந்துபேசிக் கடைறியும்படியாக இம்முறை வெனிஸ்நகரிலே மற்றுமோர் தரம் கூடினர்கள். 1903-ம், 1912-ம், 1926-ம் ஆண்டுகளில் அதேபோலும் கூட்டங்கள் பரீஸ்நகரில் நிகழ்ந்தன. இந்தக் கூட்டங்களிலே சர்வதேச முதலாவது வழிவகைகள் செய்யப்பெற்று, இவைகள் அனுசரிக்கப்படலாயின.

இந்த வழிவகைகளின் கட்டுக்கோப்பினுள் முந்திய சர்வதேசம் நியமனஞ்செய்த மலேரியாக்கம்மிஷனின் வேலையும் அடங்குவதாகும். இது இரண்டாவது உலகயுத்தத்தக்கு முந்தியவருடங்களிலே ஆற்றியுள்ள அத்தியுன்னதமானதொண்டு உள்ளபடியே பாராட்டப்படத் தகுதியுடையது. அவர்கள் நடத்திய விசாரணைகள் அயனுந்த அல்லது உப அயனுந்த நாடுகளில் சஞ்சரிக்கின்ற 30 கோடிக்குக் குறையாத மக்களை வருடந்தோறும பாதிப்பதாகிய மலேரியாவைக் குறைப்பதையே நோக்கமாகக் கொண்டன.

இந்தச் சிகிச்சைகளின் கிலேஸ்தானத்திலே மிகவிசேஷப்பட்ட நிபுணர்களைக்கொண்ட இந்தக்கம்மிஷனர் ஈடுபட்டு வேலைசெய்துதாம்கண்டறிந்த உண்மைகளை 1938-ம்ஆண்டுஅறிக்கையிட்டார்கள். இந்த அறிக்கையிலே மலேரியாத் தடைக்கு ஓர் மருந்தாக அவர்கள் குயினைனைச் சிபாரிசு செய்திருக்கின்றர்கள். மலேரியாக் காலம் முழுவதிலும் தினமும் 6 கிறேய்ன் குயினைன் பாவித்துவருவது அவசியமென்று அவர்கள் மேலும் நிதானித்துக் கூறியிருக்கின்றர்கள். இன்னும் ஓர்கால மலேரியா காணுமிடத்தி அதற்கோர் மருந்தாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் பாவித்து வரவேண்டுமெனப் புத்திகற்பித்திருக்கிறார்கள்.

மலேரியாக் கம்மிஷன் கூறியுள்ள இந்த நன்மதி சர்வதேச சுகாதாரத்துக்கு மிகமுக்கியமானது. இன்று உலகமுழுவதிலும் பரந்திருக்கின்ற கோடிக்கணக்கான மக்கள் இந்த நிபுணர்களின் நன்மதியை மேற்கொண்டு இன்றுமே பெருநன்மை அடைந்துவருகின்றர்கள்.

அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்

நத்தார், புதுவருட சோபனம்

சென் வின்சென்ற்டீபோல் சபை (அர்ச். சூசையப்பர் பங்கி)யின் அங்கத்தவர்கள் தங்கள் ஏழைகளுக்கு உதவி செய்யும் பொருட்டுத் தயாளகுணத்தோடு தருமம் ஈந்தருளிய சகல நல்லோர்களுக்கும் மனமுவந்து நன்றிகூறுகின்றர்கள். இன்னும் அர்ச். அந்தோனியாரின் தருமமுயற்சியை எங்கும் விளங்கவைக்க முன்னிற்கும் நேயர்களுக்கும் நத்தார், புதுவருட சோபனம் கூறி, ஆத்தும சரீர நன்மைகளை ஏராளமாய்ப் பொழிந்தருளும்படி கருணை நிறைந்த தெய்வியசேவைப் பிரார்த்திக்கின்றர்கள்.

நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

நாத்தாண்டி:— அர்ச். அந்தோனியாருடைய உதவியினல், காணுமற்போன எனதுபொருள் கண்டடையப்பெற்றேன். நன்றியாக வறியவர்களின் அப்பத்துக்கு ரூபா 1 காணிக்கையாக அனுப்பியிருக்கிறேன்.

பி. தெய்வானை

முல்லைத்தீவு:— கோடியற்புதரும், ஏழைகளின் பாதுகாவலரும், அதிகளின் ஆதரவுமான அர்ச். அந்தோனியாரின் சலுகையால் எனக்கு இருந்த காதுவருத்தம் நீங்கியது. அவரின் நாமம் என்றும் புகழப்படக் கடவதாக. நேர்த்திப்படி காணிக்கை அனுப்பியிருக்கிறேன்.

பே. தேவசகாயம்

ஏழாலை:— பரிசுத்த பாத்திமா மாதாவுடையவும், அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். சின்னத்தெரேசம்மாள், அர்ச். பிலோமினம்மாள், அர்ச். றீத்தம்மாள், சங். அல்போன்சாசகோதரி ஆகியிவர்களதும்மன்றாட்டத்தினல் திருஇருதயநாதர் எனது வேண்டுகோளுக்கிரங்கி, இங்கிலீஸ்-தமிழ் ஆகியிருபாஷைகளிலும் எஸ். எஸ். சி. பரீட்சையிற் சித்தியடையச்செய்தார். நேர்த்திப்படி ஏழைகளின் அப்பத்துக்குக் காணிக்கை ரூபா 5 அனுப்பியிருக்கிறேன்.

நன்றியறிதலுள்ள ஊரியன்
A. L. அரியநாயகம்

கேட்டநன்மைகள் அனுகூலமானதினல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

திரிகோணமலை: ரி. மோசேஸ் 5-00— அக்கரபத்தன: எல். ஏ. எஸ். தோமாஸ் 25-00—கொழும்பு: பி. ஜே. சலமோன் 6-00—பரப்புக்கடந்தான்: ஏ. அந்தோனி 2-00—தலவாக்கொலை: ஏ. பி. சிங்காராயர் 10-00 — அப்புத்தளை: ஏ. டி சிமோன் பிரான்சீஸ் 4-00 — மாம்புரி: ஏ. எலோனியா 3-00 — கல்கமுவா: வி. சந்தியா 2-00 — கொழும்பு: எஸ். எம். யோசேப் 5-00, எஸ். சந்தனம் 2-00—அச்சுவேலி: பி. எஸ். 2-00 — கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 4-00—நாத்தாண்டி: வி. டி பி. பெறேரு 4-00—கரவெட்டி: எஸ். வஸ்தியாம்பிள்ளை 4-00, பி. கபிரியேற்பிள்ளை 2-00 — திரிகோணமலை: தோமஸ் மோசேஸ் 2-00 — முள்ளிக்குளம்: எம். சந்தியா சில்வா 2-25—மஸ்கேலியா: பி. கபிரியல் 5-00 — மன்னார்: எஸ். எஸ். கொடிதோர் 5-00—பாஷையூர்: மூப்பர் செயம்மா 1-00, பேர்னட் யோசேப்பு 1-00, தவிது பாவிலு 1-00, மடுத்தின் எலிசபேத் 2-00, மரியராணி அந்தோனிப்பிள்ளை 1-00, மூப்பர் லேனு 1-00, மேரி பெஞ்சமின் 1-00 — யாழ்ப்பாணம்: ஏ. சிமியோன் 2-00—மாமுலில்: பிறங்அன்ரன் 30-00—கல்கமுவா: எம். சந்தியாப்பிள்ளை 2-00 — பரந்தன்: ரி. மரியான் 2-00—தலவாக்கொலை: மிக்கேல் வில்லியம் 2-00—கேகாலை: ஏ. யுவக்கிம் 5-00.

The Director,
St. Joseph's Conference.
Bishop's House.
JAFFNA.

சென் வின்சென்ற் டீ போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம்.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தில் என்நம்பிக்கையைவைத்து, பரிசுத்த ஜூதாததேயு அப்போஸ்தலர், பரிசுத்த அல்போன்சாசகோதரி, ஆசாரத்துக்குரிய யோசேவாஸ்முனீந்திரன் இவர்களின் உதவியால் என்குடும்பத்தில் ஏற்பட்ட அரசாங்கவியாச்சியம் ஒருவருஷமாய் நடந்து இப்போது அனுகூலமாய் முடிந்ததற்காக நன்றியறிதலாக ரூ. 3 அனுப்புகிறேன். இன்னும் சகலஆபத்துகளிலேயும் காப்பாற்றுவார்களாக.

திரிகோணமலை ஜே. மனுவல்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 20 1951.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org